பக்கங்கள்: 12+IV= பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 22 திங்கட்கிழமை (08-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:284

## காவல்துறை நடுவப் பணியகத்தை தேசியத் தலைவர் திறந்து வைப்பு

தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்தை நேற்றுக்காலை 6.20 மணிக்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

கிளிநொச்சியில் கண்டி வீதியில் அமைந்துள்ள இந்தப் பணியகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து, பணியகத்தைப் பார்வையிட்டபின் தலைவர் சிறப்புரை ஆற்றினார்.

தமிழீழக் காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவின் பொறுப்பாளர் நரேன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோர் பொதுச் சுடரினை ஏற்றினர்.

மூத்த தளபதி பொட்டு அம்மான் தமிழீழத் தேசியக் கொடியினையும், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் காவல்துறைக் கொடியையும் ஏற்றிவைத்தனர்.

இதன் பின்னர், தலைவர் வே.பிரபாகரன் நிகழ்வுக்கு வந்தார். அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டபின், நடுவப் பணியகத்தை நாடாவெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். பின்னர் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(12ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தை தலைவர் வே.பிரபாகரன் நாடா வெட்டித் திறந்துவைக்கிறார்...

# தேச நிர்மாணத்தில் தமிழீழ காவல்துறை முக்கிய மைல்கல் என்கிறார் பிரபாகரன்



சிறப்புரையாற்றுகிறார் பிரபாகரன்.

## கிளிநொச்சியில் நடுவப்பணியகத்தை திறந்து வைத்து அவர் சிறப்புரை

கிளிநொச்சி, செப்ரெம்பர்8

**தமிழீழக் காவல்துறையை எம் மண்ணில் நிறுவியுள்ளமை எமது விடுதலைப் போராட்டத்தில் முக்கியமான திருப்புமுனை, எமது தேச நிர்மாணத்தின் முக்கியமான மைல்கல்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.தமிழீழக் காவல்துறையின் தலைமையகப் பணிமனையை கிளிநொச்சியில் நேற்றுத் திறந்துவைத்த பின் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக வாழ்வு உயர்நிலை அடையும் பொழுதே ஓர் இனம் மகிமை பெறுகிறது; மனித வாழ்வு உன்னதம் பெறுகின்றது; அதன் சமூக உறவு வளர்ச்சி பெறுகிறது. இப்படியான சமூக வாழ்வு ஓர் இனத்திற்கு வரப்பிரசாதமாக அளிக்கப்படுவதல்ல; காலத்தால் உவந்தளிக்கப்படுவதுமல்ல. அத்தோடு இது அடையப்படமுடியாத பொருளுமல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் அரசைக் கவிழ்ப்பது பற்றிய பேச்சுக்கு கதவு திறந்தே உள்ளது!

### ஜே.வி.பி. நேற்று அறிவிப்பு

கொழும்பு, செப்.8

தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களே தோல்வியில் முடிவடைந்தன. ஆனால், மக்கள் விரோத ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியின் பேச்சுக்களுக்கு ஜே.வி.பியின் கதவு இன்னும் திறந்தே இருக்கின்றது.

ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுக் காலை கொழும்பு தேசிய நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



காவல்துறையின் அணிவகுப்பு மரியாதையை தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொண்ட காட்சி. அருகில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் புலிகளின் மூத்த தளபதிகள் காணப்படுகின்றனர். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் சகல கட்சிகளுக்கும் பங்கு வேண்டும்

### முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்

யாழ்ப்பாணம்,செப்.8

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு-கிழக்கை செயற்கையாகப் பிரிக்க முயல்வது அவர்களின் அபிலாஷைகளுடன் முரண்படுவதாகும். சமாதானப் பேச்சுக்களினால் வடக்கு - கிழக்கில் உருவாக்கப்படும் இடைக்காலத் தீர்வு தொடர்பான கட்டமைப்பானது பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவருமான அ.வரதராஜப்பெருமாள்.

(12ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோன் | NSB





*கிளிநொச்சியில் நேற்று காவல்துறை தலைமையகத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மேடையில் அமர்ந்திருப்பதையும் விழாவில் கலந்துகொண்ட ஏனைய தளபதிகளையும் படங்களில் காணலாம்.*

# இலங்கையின் பாதுகாப்பிலும் இந்தியாவுக்கு அக்கறை உண்டு

## இந்தியத் தூதுவர் நிருபம் சென் கூறுகிறார்

கண்டி,செப்.8

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு பல்லாண்டு காலத் தொன்மைவாய்ந்ததாகும். இந்நிலையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு மூலம் இந்நாட்டின் பாதுகாப்பிலும் இந்தியாவுக்கு அக்கறை உண்டு.

- இவ்வாறு கூறினார் இலங்கையின் இந்தியத் தூதுவர் நிருபம் சென்.

மலையகத் தோட்டப்புற பார்வை குறைந்த மக்களின் நலனைக்கருத்திற்கொண்டு கண்டி போதனா வைத்தியசாலையில் இயங்கும் கண்சிகிச்சை பிரிவுக்கு மருந்து வகைகளையும் சத்திரசிகிச்சைக்கான உபகரணங்களையும் உள்ளடக்கிய மருந்துத் தொகுதிகளை அன்பளிப்புச் செய்து உரையாற்றிய பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"இந்த நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த மட்டில் எமக்கும் அக்கறை இருப்பதால் இரு நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு மூலம் நல்லெண்ணத்தை வளர்க்க 80 பேர் அடங்கிய குழு ஒன்று இலங்கை வந்து இப்போது ஆராய்ந்து வருகின்றது. இன்று வழங்கப்பட்ட இவ்வுதவிகள் தவிர இலங்கையில் கைத்தொழில் கண்காட்சி ஒன்றையும் நடத்துவதற்கு நாம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இவ்விரு நாடுகளுக்குமிடையேயான புரிந்துணர்வும், நட்புறவும் தொடர்ந்து நிலைக்க இவை நல்ல முயற்சிகளாக அமையும்."

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் கண்டி உதவி இந்தியத் தூதுவர் அச்சல் பி.மல்ஹோத்திரா, கண்டி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க, தோட்ட அபிவிருத்தி நிதியமைச்சின் தலைவர் ரஞ்சித் எலகல்ல ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(ஐ)

# பெண்கள் படையணியினரின் சைக்கிள் ஓட்டப் போட்டி

கிளிநொச்சி,செப்.8

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணிகளுக்கிடையிலான சைக்கிளோட்டப் போட்டி நேற்று வன்னியில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 6மணியளவில் ஆரம்பமான இந்தப் போட்டி புதுக்குடியிருப்பிலிருந்து தொடங்கி பரந்தன் சந்தியில் முடிவடைந்தது.

போர்ப் பயிற்சிக் கல்லூரியின் மகளிர் பொறுப்பாளர் அஜந்தி தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

போட்டியினைத் தளபதி கேணல் கடாபி ஆரம்பித்து வைத்தார்.

போட்டியில் மாலதி படையணியைச் சேர்ந்த தமிழ்விழி முதலாம் இடத்தையும், அன்பரசி படையணியைச் சேர்ந்த துளசிஅரசி இரண்டாம் இடத்தையும், சோதியா படையணியைச் சேர்ந்த மலரேந்தி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் படையணிப் பொறுப்பாளர்கள், தமிழீழ விளையாட்டுத் துறைப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கிடையிலான இவ்வாறான விளையாட்டு நிகழ்வுகள் வன்னியின் பல பகுதிகளிலும் இடம்பெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

# யாழ்.வணிகர் கழகத்தில் கணனி பயிற்சி நிலையம்

## இன்று வைபவ ரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவலகத்தில் கணனிப்பயிற்சி நிலையம் ஒன்று இன்று திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு சம்பிரதாயபூர்மாக ஆரம்பித்து வைக்கப்படும்.

இதன் மூலம் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கழக அலுவலகத்தில் ஏற்கனவே வர்த்தகத் தகவல் மையம் ஒன்று இயங்கி வருவதுடன் வர்த்தகர்களுக்கு நூலக வசதியும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-10)

# வடக்கு, கிழக்கில் 8 மைதானங்களுக்கு நவீன பார்வையாளர் மண்டபங்கள்

## விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் விளையாட்டு மைதானத்துடன் கூடிய நவீன பார்வையாளர் மண்டபங்களை அமைக்க இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஒரு மாவட்டத்தில் ஒரு விளையாட்டு மைதானம் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது. அங்கு சகல வசதிகளும் செய்யப்படும். நவீன உபகரணங்கள் அடங்கிய விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணசபை 25 லட்சம் ரூபாவை மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க இந்நிதி பயன் படுத்தப்படவிருக்கிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய 50 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

**கிரிக்கெட்**

# யாழ்.மாவட்ட அணி நாளை வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம்,செப்.8

வவுனியாவில் இடம்பெறும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்மாவட்ட அணி நாளை செவ்வாய்க்கிழமை இங்கிருந்து வவுனியா புறப்படுகின்றது.

வவுனியா அணியுடன் முதலாவது ஆட்டத்தில் யாழ்.அணி நாளைமறுதினம் மோதுகின்றது.

யாழ்.அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

என்.சிவராசா (தலைவர்), ரி. கௌரிபாகன் (உபதலைவர்), ஆர். ஷாஜகான், எஸ்.லக்சுமிகாந்த், பி.லவேந்திரா, எஸ்.அகிலன், ஆர். கிருஸ்ணராசா, எஸ்.தனஸ்காந்தன், க.றொஹான், எஸ்.மதூசன், என். நிஸாகரன், பி.சாள்ஸ், வி.றஜீவ்குமார், வி.மணிவண்ணன், என்.சன்ஜீவா, றோசான், அ.யசின்தன்.

வி.கே.சண்முகலிங்கம் (பயிற்றுநர்), பெ.வீரசிங்கம் (முகாமையாளர்).

(ஐ-3)

# வாழைச்சேனை அசம்பாவிதங்களால் பாதிப்புற்றோருக்கு 19ஆம் திகதி நஷ்டஈடு

கடந்த வருடம் வாழைச்சேனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டோருக்கு எதிர்வரும் 19ஆம் திகதி நஷ்டஈடு வழங்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும், துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மேற்கொண்டுள்ளார்.

பாதிக்கப்பட்டோர் தமக்கு இழப்பீடு பெற்றுத் தரும்படி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அறிக்கையை அவர் சமர்ப்பித்திருந்தார். அதன்படி, சுமார் 4கோடியே 53லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ஐ.தே.கட்சி - முஸ்லிம் காங்கிரஸ் இடையிலான**

# முரண்பாடுகளுக்கு தீர்வு காண உயர்மட்டக்குழு நியமனம்

கொழும்பு,செப்.8

ஐ.தே.கட்சிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண இருகட்சிகளின் உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

பிரதமருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் கடந்த சந்திப்பில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

கிழக்கு முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அரசு உறுதிதராவிட்டால், எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாகவும் ஐ.தே.கவுடன் சேர்ந்து போட்டியிட வேண்டுமாயின் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்றும் - ஹக்கீம் தெரிவித்து வந்தார்.

இதனால், இருகட்சிகளுக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளை அடுத்து பிரதமருக்கும் ஹக்கீமுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது.

முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வு ஒன்றை எட்டுவதற்கான உயர்மட்டக்குழு ஒன்றை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

(எ-3)

## மூதாட்டியின் சங்கிலி திருடியவர் சிக்கினார்

குளித்துக்கொண்டிருந்த வயோதிப மாதுவின் கழுத்தை நெரித்து சங்கிலியை அறுத்துக்கொண்டு அவரைக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டு ஓடிய நபர் நேற்று கைது செய்யப்பட்டிருக்கிறார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சங்கிலியை பறிகொடுத்த மூதாட்டியான கந்தையா வள்ளிப்பிள்ளை (வயது-84) கொடுத்த தகவலின் பேரில் இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த அருணாசலம் சிவகுமார் (வயது-46) என்பவரே கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,செப்.8

சங்குவேலி விநாயகர் ஆலயத்தின வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இன்று சப்பரத் திருவிழாவும், நாளை தேர்த் திருவிழாவும், நாளைமறுதினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இன்று மாலை 4 மணிக்கு விநாயகப்பெருமானுக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழா இடம்பெறும். இரவு 9 மணிக்கு விசேட நிகழ்வாக உடுவில பாரதியார் கழகத்தினர் வழங்கும் ' பெண்மை ஆற்றலில் பெரிதும் போற்றப்படுபவள் கண்ணகியா? சீதையா? என்ற தலைப்பிலான பட்டிமன்றம் நடைபெறும்.

(ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.8

சங்கானை கிழக்கு புவனயன் தோட்ட பாலநாகம்மாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.(எ-10)

★ ★ ★

வடமராட்சி,செப்.8

மேலைப்புலோலி தம்பசிட்டி வீதி மலையந்தோட்டம் ஸ்ரீமுருகன் கோவில் சம்புரோசண அஷ்டபந்த மஹாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும். (ஓ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.8

அளவெட்டி அடுமொம்பற்று ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.04 மணி தொடக்கம் 9.40 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

(எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ். வண்ணை அன்னசந்திர முதலாம் ஒழுங்கை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.04 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேற்று நண்பகல் 12மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் அடியார்கள் எண்ணைக்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. (எ-10)

★ ★ ★

வடமராட்சி,செப்.8

தென்புலோலி ஆண்டியாவளவு ஸ்ரீ ஞான வைரவப்பெருமான் கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை மேலைப்புலோலி தெணியம்மன் கோவில் பிரதமகுரு பிரதிஷ்டாபூஷணம் குஞ்சிதபாதக் குருக்கள் நடத்திவைப்பார். (எ-10-173)

★ ★ ★

தென்மராட்சி,செப்.8

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும். (எ-117)

# பேர்முடாவில் வீசிய கடும் புயல் வாகனங்களை அள்ளிச் சென்றது

பேர்முடாவில் கடந்த இரு தினங்களாக கடும் புயல் வீசி வருகிறது. மணிக்கு 120 மைல் வேகத்தில் வீசும் இந்தப் புயலால் மரங்கள் வீழ்ந்துள்ளன. வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

கடந்த ஐம்பது வருடங்களில் வீசிய மிக மோசமான புயல் இது எனக் கருதப்படுகிறது.

புயலின் கொடூரத்தைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய கொள்ளையர்கள், வீடுகளில் புகுந்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். மக்கள் குறிப்பிட்டபகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளதால் அந்தப் பகுதி முழுவதும் உள்ள வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன.

புயலினால் 26 ஆயிரம் வீடுகளின் மின்னிணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. சேதவிவரங்கள் மதிப்பிடும் பணிகள் நடைபெறுகின்றன.

பாலம் ஒன்றைக் கடந்து சென்ற வேளை இராணுவ வாகனம் ஒன்றை புயல் அள்ளிச் சென்றது. இதனால் அந்த வாகனத்தின் இருந்த இருவரும் காணாமற்போயுள்ளனர்.

இவர்களுடன் மேலும் இருவரையும காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களையும் கடற்கரையில் நின்ற வாகனங்களையும் படகுகளையும் புயல் அள்ளிச் சென்றுள்ளது.

காணாமற் போனோரை தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டுள்ளனர். புயல் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாகவும் உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.





பேர்முடாவில் வீசிய புயல் காற்றில் சேதமடைந்த வீடொன்றை மேற்படத்திலும், விமான நிலையத்திற்கு செல்லும் கடற் பாலம் புயலில் உருக்குலைந் திருப்பதை அருகேயுள்ள படத்திலும் காணலாம்.

# ஹமாஸின் ஆன்மீகத் தலைவர் இஸ்ரேலின் தாக்குதலில் காயம்!

காஸா,செப்.8

இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் காஸாவில் நடத்திய அதிரடித்தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் ஷீக் அஹமத் யசீன் உட்பட 18பேர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீன பிரதமர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து, தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதாக அறிவித்துள்ள இஸ்ரேல், ஆகாய மற்றும் பீரங்கித் தாக்குதல்களைக் கண்மூடித்தனமாக நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் காஸாவில் வீடுகள் கட்டடங்கள் என்பன தரைமட்டமாகியுள்ளன. மேலும் சில இடங்களில் தீ பரவியுள்ளது என்று பலஸ்தீன நிர்வாகம் அறிவித்துள்ளது. காயமடைந்த ஆன்மீகத் தலைவர் யசீன், பலஸ்தீனர்கள் மீது இடைவிடாது தாக்குதல்களை நடத்தும் இஸ்ரேல், அதிக விலையை கொடுக்கப் போகிறது என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

இவரின் எச்சரிக்கையை அடுத்து இஸ்ரேல் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



ஜெருசலேமிலும் அதனை அண்டியுள்ள பிரதான வீதிகளிலும ஒருபோதும் இல்லாத வகையில் இஸ்ரேலியப் பொலீஸார் திடீர் சோதனைகளை நடத்துகின்றனர். வீதியால் செல்லும் அனைவரும் சோதிக்கப்படுகின்றனர். இதேவேளை:-

இத்தாலியில் கூடிய ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவையும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதென தீர்மானித்துள்ளனர். ஹமாஸ் இயக்கத்தின் படைப்பிரிவு ஏற்கனவே பயங்கரவாதப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முரொசொலிமாறன் இந்தியா திரும்பினார்

சென்னை, செப்.8

இந்திய மத்திய அமைச்சர் முரசொலிமாறன் நேற்று அதிகாலை சென்னை திரும்பினார். அவர் தற்போது அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அமெரிக்காவில் உள்ள மெதடிஸ்ட் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாறன், நேற்று அதிகாலை 3 மணியளவில் சென்னை அழைத்து வரப்பட்டார். அவர் அப்பலோ மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சையைத் தொடர்கிறார்.

அமெரிக்கச் சிகிச்சையால் அவரது உடல் நிலையில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படாத காரணத்தால் அவர் மீண்டும் சென்னை அழைத்து வரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அமெ. விமானம் மீது ஏவுகணை வீச்சு!

ஈராக்கில் அமெரிக்க விமானம் ஒன்றின்மீது நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயினும், ஏவுகணைகள் இலக்கைத் தாக்கத் தவறியதால் விமானம் தப்பியது.

பக்தாத் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற அமெரிக்க இராணுவ சரக்கு விமானத்தைக் குறிவைத்து, தரையிலிருந்து வான் இலகைத் தாக்கும் இரு ஏவுகணைகள் இனம் தெரியாதவர்களால் ஏவப்பட்டதாகவும் -

ஆனால், அந்தச் சமயத்தில் குறிப்பிட்ட விமானம் 14 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்ததால், ஏவுகணைகளால் இலக்கை அடைய முடியவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

# சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை! அமெரிக்காவின் நாடகம் அம்பலம்!!

## ஐ.சி.ஆர்.சி. உண்மையை வெளிப்படுத்தியது

மியான்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகி, தன்னை தடுப்புக் காவலில் வைத்திருப்பதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருக்கிறார் என்று வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சூகி உண்ணாவிரதம் இருக்கிறார் என்று வெளியான செய்திகள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நடத்திய நாடகமே என்று அது விமர்சித்திருக்கிறது.

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி இராணுவ ஆட்சியாளர்களால் இரகசிய இடத்தில் சிறைவைக்கப்பட்ட ஆங்சாங் சூகி , தன்னை விடுவிக்க வலியுறுத்தி உண்ணாவிரதம் இருக்கிறார் என்று அமெரிகா அறிவித்திருந்தது. இதனை, ஆதாரமற்றது எனக் கூறி மியான்மர் இராணுவ ஆட்சியினர் மறுத்திருந்தனர். சூகி உண்ண விரதம் இருக்கவில்லை என்று தாய்லாந்தும் கூறியது.

ஆனால்,சூகி உண்ணாவிரதம் இருப்பதற்கான தகுந்த ஆதாரங்கள தன்னிடம் உண்டு என்று அமெரிக்கா கூறிவந்தது. அதேவேளை, சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லையாயின் அவரை விடுதலை செய்து அதனை உறுதிப்படுத்துங்கள் என்றும் மியான்மருக்கு அது சவால் விட்டது.

இதையடுத்து சூகியை சந்திக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவரைச் சந்தித்த செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளே சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை என்ற உண்மையைக் கூறியுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் சூகியுடன் அதிகாரிகள் ஆலோசனை நடத்தியிருந்தனர்.

சாதாரண கைதி ஒருவரை சந்திப்பதைப்போலவே சூகியை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் சந்தித்தனர் என்று கூறிய மியான்மரின் புதிய பிரதமர், விரைவில் தான் சூகியைச் சந்திக்கவிருக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

ஆனால்,சூகியை விடுதலை செய்வது குறித்து அவர் எதனையும் கூறவில்லை.

# 'எயிட்ஸ்' அழகு ராணிப்போட்டி!

'எயிட்ஸ்'நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையாக 'எயிட்ஸ்'நோயால் பீடிக்கப்பட்ட பெண்கள் பங்கேற்ற அழகு ராணிப் போட்டி ஒட்சுவானில் இடம்பெற்றது.

தலைநகர் கெப்ரோனில் இடம்பெற்ற இந்த 'எயிட்ஸ்'அழகு ராணிப் போட்டியில் 14 பெண்கள் பங்கேற்றனர். ஒட்சுவானின் பாரம்பரிய பழங்குடியின உடை உட்பட பல்வேறு ரக உடைகளை இப்பெண்கள் அணிந்திருந்தனர். இவர்களில் 31 வயதான கலலேலுட்ஸ்பி என்ற பெண் 'எயிட்ஸ்'அழகு ராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எயிட்ஸ் நோயாளிகள் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டு மூலையில் முடங்கி இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதை இந்த அழகுராணிப் போட்டியும் தனது வெற்றியும்எடுத்துக் காட்டுவதாக கலலேலு தெரிவித்தார். உலகளாவிய ரீதியில் அதிக 'எயிட்ஸ்' தொற்றுடைய நாடு ஒட்சுவான் ஆகும். இங்குள்ள சனத்தொகையின் 38 சதவீதமானோர் எயிட்சினால் பீடிக்கப்பட்டுள்ளனர். (ஓ)



ஒட்சுவானில் இடம்பெற்ற "எயிட்ஸ்" அழகுராணிப் போட்டியில் பங்கேற்றவர்களில் ஒருவர்.

# அமெரிக்காவின் பிரேரணை குறித்து ஐ.நா.சபையில் தொடர் ஆலோசனை

நியூயோக்,செப்.8

ஈராக்கிற்கு பன்னாட்டு அமைதிப் படையைக் கொண்டு செல்வதற்காக அமெரிக்கா ஐ.நாவில் கொடுத்துள்ள புதிய பிரேரணை குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறது.

தனது பிரேரணையை எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாக தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் அமெரிக்கா குறியாய் இருக்கிறது. ஆனால், அதற்கு பிரான்ஸும், ஜேர்மனியும் எதிர்ப்புக்காட்டியுள்ளதால் ஏனைய உறுப்பு நாடுகள் இது குறித்து விரிவாக ஆராய்ந்து வருகின்றன.

அமெரிக்காவின் புதிய பிரேரணை, ஈராக்கில் தேர்தல் நடை பெற வசதியாக அரசமைப்புச் சட்டத்தை ஐ.நா. வகுக்க வகை செய்கிறது. ஆனால், பன்னாட்டு அமைதிப்படைக்கு தானே தலைமை தாங்குவேன் என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டினாலேயே அதனது பிரேரணை நிறைவேறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரேரணையை ஜேர்மனியும், பிரான்ஸும் ஏற்க மறுத்துள்ள போதும், அதில் திருத்தங்களைக் கொண்டுவரலாம் என்று கூறியுள்ளன.

"ஈராக் தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க சமாதானத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவது முடியாதது அல்ல. எளிதான காரியமே" என ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஈராக் தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க சமாதானத் தீர்மானம் ஒன்றை உருவாக்க முடியும். இருந்தாலும் இந்த விஷயத்தில் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளைக களையபாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் என்னைச் சந்தித்துப் பேசவேண்டும். சில பிரச்சினைகள் பற்றி விவாதித்து , சுமுகத் தீர்வுகண்டால், ஈராக் தொடர்பான தீர்மானம் சுமுகமாக நிறைவேறி விடும். அதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும், நானும் சந்தித்துப் பேசுவது விரைவில் நடைபெறும் என நம்புகிறேன். ஈராக் தொடர்பாகக் கொண்டுவரப்படும் தீர்மானத்தில், அந்நாட்டில் ஐ.நா. மேற்கொள்ள உள்ள பணிகள் பற்றித் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும். ஈராக் போரின்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை மறந்து, சர்வதேச சமுதாயத்தினர் அனைவரும் ஒன்று சேரவேண்டும். மனிதாபிமானத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைத் கருத்திற்கொண்டு அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் - என்று கூறினார்.

# நிர்வாணமாகப் பிச்சை எடுத்த ஆபிரிக்க நகைச்சுவை நடிகர்!

ஜோகனஸ்பேர்க்,செப்.8

நகைச்சுவை நடிகர் ஒருவர் தனது சக நடிகருடன் இணைந்து வீதியில் நிர்வாணப் போராட்டம் நடத்திய சம்பவம் தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

சனநடமாட்டம் நிறைந்த ஜோகனஸ்பேர்க் பிரதான வீதியொன்றிலேயே இந்த நிர்வாணப் போராட்டத்தை அவர்கள் நடத்தினர்.

தென்னாபிரிக்காவில் வேலையில்லாத திண்டாட்டம் அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டியே இந்தப் போராட்டத்தை நடத்தினோம் என்று இவர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் நிர்வாணப் போராட்டத்தைக் கண்டு அங்கு நின்ற எவரும் வியப்படையவில்லை. ஏனெனில், அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகளவில் உள்ள தால் இத்தகைய காட்சிகளை அடிக்கடி பார்க்க முடியுமாம்.

# தைவானில் 50 ஆயிரம் பேர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்

சீனக்குடியரசு என்ற பெயரை மாற்றி தைவான் என்ற பெயரைப் பயன்படுத்துமாறு கோரி தைவானில் நேற்று 50 ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சீனாவிலிருந்து விடுபட்ட ஒரு நாடாக தைவான் விளங்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

மேலும் தைவான் தனிநாடு என்பதால் சுதந்திரமான தொடர்புகளை வைத்திருக்க முடியும் என்றும், இந்த ஆர்ப்பாட்டம் மக்களுக்கு விழிப்புணர்வை எடுத்துக்காட்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோா சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

தைவானை தனது சுயாட்சி மாநிலமாகவே சீனா கருதுகிறது. ஆனால்,தைவான் சுதந்திரமாகச் செயற்படத்தொடங்கினால் சீனா அதன் முழுக்கட்டுப்பாட்டையும் பிரயோகிக்க நேரிடும் என்று சீனா தெரிவிக்கின்றது. ஆனால், வரலாறு ஜனநாயகத்தைத் தடுத்துநிறுத்த அனுமதிக்காது என்று தாய்வான் முன்னாள் ஜனாதிபதி லீ ரொங் ஹூய் தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி சென் ஹுய்-பியன் கலந்து கொள்ளவில்லை. ஆனாலும் அவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## தேவை

எமது விஸ்வகர்மா (பிரைவேட்) லிமிட்ட்ட் நிறுவனத்திற்கு பின்வரும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.
தகுதியானவர்கள் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

1. மேசன் தொழிலாளர்கள்.
2. தச்சுத் தொழிலாளர்கள்.
3. கூலித் தொழிலாளர்கள்.

தொடர்புகளுக்கு:
**சிவன் மாளிகை லிமிட்டட்,**
**166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(22323) (13-18)



## தேவை

**வெல்டர்**

1. குறைந்தது ஒரு வருட அனுபவம்.
2. பழக விரும்புபவர்களும் நேரில் வரவும்.
3. மெசினில் தச்சு வேலை செய்யக் கூடியவர்களும் தேவை.

ம. மகாசிவம்,
மெக்றோ எஞ்ஜினியரிங் கொம்பனி.
ஆஸ்பத்திரிக்கு முன்,
வினாசித்தம்பி வீதி,
சாவகச்சேரி. (22304) (13-18)



## யாழ் நகரில் முதன்முறையாக நவீன உபகரணங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது



# Power Gym

body care
and fitness centre



உடல் பருமனா?
ஊளைச் சதையா?
கவலையை விடுங்கள் இன்றே அங்கத்தவர் ஆகுங்கள்,
இளைஞர் முதல் முதியோர் வரை அவரவர் தேவைக்கு ஏற்ற உபகரணங்கள், மகளிருக்கான பிரத்தியேக நேரம் அத்துடன் நிபுணத்துவம் வாய்ந்த பயிற்றுநரின் சேவையுடன் Video மூலம் செயன்முறை காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன.

இடம் :
**Power Gym**
230/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திசந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்)
தொலை பேசி: 077-7370153

(22333)
UTHAYAN graphics



**PRIMA** **PRIMA**

## மங்களகரமான புதுக்கடை திறப்புவிழா

எமது வடமராட்சி வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உங்கள் நன்மை கருதி பிரதான வீதி, பருத்தித்துறையில் எமது கிளை 08/09/2003 திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும். உங்களுக்குத் தேவையான **PRIMA** கோழித்தீன், கால் நடை மருந்துகள், கோழித்தீன் பாத்திரங்கள், **PRIMA** கோழிக்குஞ்சுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு :

08-10/09/2003 வரை மட்டும் 5% விலைக்கழிவுடன் **PRIMA** கோழித்தீன்கள் விற்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**PRIMA**
Authorised dealer:
Ceylon Grain Elevators Ltd.

Nallur Farm Centre
(பருத்தித்துறை கிளை)
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(22306) (11-14)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அனுராதபுரம், மாவடியைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தரும் பல சமூக சேவை ஸ்தாபனங்களில் பெரும் பதவி வகித்து வருபவரும் சிறந்த சமூக சேவையாளரும் எமது குடும்ப நண்பருமான

**உயர்திரு.**
**கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல்**

அவர்கள் 01.09.2003 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி உயர்திரு. பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது சேவை மேன்மேலும் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*"பதவியின் நிமித்தம் பலர் பெருமை அடைகின்றனர். ஆனால் இந்தப் பதவிக்கு இவரை நியமிப்பதன் மூலம் பதவி பெருமை அடைகிறது"*

வாழ்த்துபவர்:
**B.R.அன்ரன்**
உரிமையாளர்,
டேனி கூல், கோப்பி பார் அன் ரேட்ஸ்.

*இருபாலைச் சந்தி,*
*கோப்பாய்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அனுராதபுரம், மாவடியைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தரும், கொழும்பு அகில இலங்கை பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் சங்கத்தின் முன்னாள் உப தலைவரும், இருபாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத் தலைவரும், வலி. கிழக்கு பிரதேசசபை கோப்பாய் பிரிவு அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் தலைவரும், கோப்பாய் புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகத்தின் பொருளாளரும், இருபாலை கிழக்கு லிங்கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் புனருத்தாரண சபையின் பொருளாளரும், கோப்பாய் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரும், வலி. கிழக்கு பிரதேச சபைப் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினரும், நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இருபாலை கிளை இல. 34இன் முன்னாள் தலைவரும், கோப்பாய் பொது நூல்நிலையத்தின் செயற்குழு உறுப்பினரும், கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி செயற்குழு உறுப்பினரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு புனர்வாழ்வு, புனரமைப்பு குழுவின் பிரதிநிதியும், இருபாலை J/260 பிரிவு கிராமிய புனரமைப்புக் குழுவின் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய

**உயர்திரு. கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல்**

அவர்கள் 01.09.2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி உயர்திரு.பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது பணி மேன்மேலும் சிறப்புற வாழ்த்தி இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி த.ஸ்ரீதரன் வித்தியா
குடும்பத்தினர் (கனடா)
திரு.திருமதி மா.சுரேஸ்குமார் ஸ்ரீப்பிரியா
குடும்பத்தினர் (ஜேர்மனி)

(22331) (13-18)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை பரராஜசிங்கம்

இணுவிலை பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பரராஜசிங்கம் 05.09.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராஜா (இத்தாலி), நவரட்ணராஜா (கொழும்பு), அருந்தவமலர்(இத்தாலி), பவளமலர், காலஞ்சென்ற யோகராஜா, மனோகரராஜா மற்றும் சௌந்தர்ராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பகவதி அம்மாள் (பிரான்ஸ்), மலர்க்கொடி (கொழும்பு), நேசகுமாரன் (இத்தாலி), காலஞ்சென்ற சோமசுந்தரம் (சுருவில்) மற்றும் சுகிர்தா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கலா, மாலா, கண்ணன், சங்கர், சுமதி, ரஞ்சி, ரஜனி, நளினி, பானு, லக்சி, சசி, ஜனனி, சதீஸ், ரேகா, அனுஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2003) திங்கட்கிழமை பிறபகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
நவரட்ணராஜா (காந்தி)
மகன்.

(22343) (26-13-18)

உதயன்

## அரசியல் தில்லுமுல்லுகளுக்கு துணை போகும் படையினர்

ஆட்சி அதிகாரங்களுக்காகத் தவம் கிடப்போர், குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டின் பாதுகாப்பை விலை பேசவும் பின்நிற்க மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் தகவல்கள் இப்போது வெளியாகியிருக்கின்றன.

ஐந்து தசாப்தகால இனப்பூசலுக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் இப்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகளுக்கு முக்கிய பரீட்சைக்களமாக அமைந்திருப்பது கிழக்கு மாகாணம் - தென் தமிழீழம்.

அங்குள்ள களநிலைவரங்களை பல்வேறு அரசியல் சக்திகளும் தங்களது குறுகிய அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்தி வருவது ஒரு புறமிருக்க, அங்குள்ள மூத்த படை அதிகாரிகள் மற்றும் தளபதிகளோடு சேர்ந்து சில அரசியல் தலைவர்கள் 'அரசியல் சூழ்ச்சிச் செயல்களில்' ஈடுபடுகின்றமை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இது அமைதியை விரும்பும் - சமாதான முயற்சிகளை நாடும் - அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கின்றது.

சமாதான முன்னெடுப்புக்களில் பிரதமர் ரணில் தலைமையிலான அரசு ஆர்வமும் தீவிரமும் காட்ட மறுபுறத்தில் கிழக்குப் பாதுகாப்பு நிலைமைகளை மோசமாகச் சித்திரிக்கும் வகையிலான தகவல்களை பகிரங்கப்படுத்துவதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைக்கும் கைங்கரியமும் முனைப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த சதியில் படை அதிகாரிகளே நேரடியாக ஈடுபாடு காட்டுவதான தகவல்கள்தான் இப்போது அம்பலமாகியிருக்கின்றன.

அண்மையில் கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு விளக்கம் அளிப்பதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி என்ற முறையிலும் முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் இந்த விடயங்களை அறிந்து கொள்ளும் பொறுப்பும் கடப்பாடும் அவருக்கு உண்டு.

ஆனால், அந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி வரவேயில்லை. ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் பொ.ஐ. முன்னணியின் தேசியப் பட்டியல் நியமன எம்.பி.யுமான லக்ஷ்மன் கதிர்காமரும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான சந்திரானந்த சில்வாவும் வந்திருந்தனர்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை பற்றிய முக்கிய - இரகசிய - தகவல்கள், உளவு அறிக்கைகள் இருந்தால் அவற்றைப் படைத்தளபதிகள் ஜனாதிபதியிடம் வழங்குவதில் தப்பில்லை. ஆனால், அதைவிடுத்து எதிரணி எம்.பியான லக்ஷ்மன் கதிர்காமரிடமோ அல்லது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமோ அதை அவர்கள் வழங்கத்தேவையில்லை; வழங்கவும் கூடாது.

ஆனால், கிழக்கில் - திருகோணமலையில் - அரச படைகளின் பாதுகாப்பு நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. புலிகள் அங்கு திடமாகக் காலூன்றி விட்டார்கள் என்று கிழக்கு கடற்படைத்தளபதி வசந்த கரண்கொடவினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் உளவு அறிக்கை ஒன்றைக் கடற்படைத்தளபதி அன்றைய தினம் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஒப்படைத்திருக்கின்றார்.

இவ்வளவுக்கும் இத்தகைய மோசமான நிலைமை பற்றிக் குறிப்பிடும் முக்கிய உளவு அறிக்கை, பாதுகாப்பு அமைச்சுக்கோ அதன் செயலாளருக்கோ, அரசுக்கோ சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்த உளவு அறிக்கையோடு கடந்த 30 ஆம் திகதி நாட்டின் முக்கிய பத்திரிகைகளின் உரிமையாளர்களைச் சந்தித்தார் கதிர்காமர். அந்த உளவு அறிக்கையை ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தி சமாதான முயற்சிகளை அடியோடு தகர்ப்பதும். அதன் மூலம் அரசில் லாபம் ஈட்டுவதும் அவரது திட்டமாக இருந்தது.

ஊடகவியலாளர் மூலம் முதல் தகவல்களைப் பெற்றுக்கொண்ட பிரதமர், அது குறித்து உடனடி, உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டார்.

அப்போதுதான் அரசுக்கோ பிரதமருக்கோ பாதுகாப்பு அமைச்சருக்கோ பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கோ கூட வழங்கப்படாத - தெரிவிக்கப்படாத - உளவு அறிக்கை ஒன்று அரசியல் பிரசார நோக்கோடு தயாரிக்கப்பட்டு, மூத்த படைத்தளபதிகளினால் எதிரணி எம்.பி ஒருவருக்கு வழங்கப்பட்டது என்பது, அவ்வாறு அது வழங்கப்பட்டு நான்கு நாள்களின் பின்னர் அரசுத் தலைமைப் பீடத்திற்குத் தெரியவந்தது.

கிழக்கு கடற்படைத்தளபதியின் இந்த உளவு அறிக்கையை ஏனைய படைத்தளபதிகள் பலர் ஏற்க மறுத்துள்ளனர். அது அரசியல் உள்நோக்கங்கள் சிலவற்றை நிறைவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டது என்பது பலரின் கருத்து. கீழ்மட்ட படையினர் மத்தியிலும் பெரும்பான்மை சிங்களப் பொதுமக்கள் மத்தியிலும் குரோத உணர்வை ஊட்டுவதன் மூலம் சமாதான முயற்சிகளை சிதைப்பது அந்த அறிக்கை தயாரிப்பின் நோக்கம் என்பதும் தெளிவு.

அரசுக்கோ, அரசின் தலைமைப் பீடத்திற்கோ தெரியப்படுத்தப்படாமல் இரகசியமாக அது பேணப்பட்டு, எதிரணி எம்.பியின் பிரசார நாடகத்திற்காக அவரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அந்த செயலே அந்த அறிக்கையின் உள்நோக்கத்தை புலப்படுத்தப் போதுமானதாகும்.

பராமரிப்பு இல்லங்களில் வாழ்வது அல்ல

# குடும்பச் சூழலே முதியோர்களின் விருப்பு; அதனை உணர்வது இளையோர் பொறுப்பு!

## சமூக நலத்துறைப் பணிப்பாளர் தெரிவிப்பு

கொக்குவில்,செப்.8

முதியோர், இல்லங்களில் வசிப்பதைவிட குடும்பச் சூழலில் வசிப்பதையே பெரிதும் விரும்புகின்றனர். இந்த உண்மையை கருத்தில் கொண்டு செயற்படவேண்டியது அனைவரதும் கடமை.

எனவே இவை குறித்து இளைய தலைமுறையினர் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அரச ஊழியரது கடமை.

- இவ்வாறு வடக்கு - கிழக்கில் உள்ள சகல பிரதேச செயலர்களையும் கேட்டுள்ளார் மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளர் திருமதி என்.ஆர்.ரஞ்சினி.

சர்வதேச முதியோர் வாரத்தை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து 7 ஆம்திகதி வரை பிரதேச ரீதியாக அனுஷ்டிக்குமாறு கோரும் சுற்றறிக்கை ஒன்றை பணிப்பாளர் கடந்தவாரம் அனுப்பி வைத்திருந்தார். அந்த சுற்றறிக்கையிலேயே இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் பொதுவாக முதியோர்கள் முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வசிப்பதைவிட குடும்பச் சூழலில் தத்தம் உறவினர் மத்தியில் அன்பு, ஆதரவுடன் வாழ்வதையே விரும்புகின்றனர்.

எனவே இந்த உண்மையை கருத்தில் கொண்டு இளைய தலைமுறையினர் மத்தியில் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் வகையில் மாணவர் மத்தியில் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

அதேவேளை - முதியோர் தங்கள் அந்திமக் காலத்தில் குடும்பச் சூழலில் இருந்து தனிமைப்படுத்தப்படாத வகையில், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் முதியோர் பகல் பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்படவேண்டும்.

சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் முதியோர் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கையை எடுக்கவும். இவற்றை நிறுவுவதற்குத் தேவையான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் யாவும் எமது திணைக்களம் மூலம் வழங்கப்படும்.

மேலும், முதியோர் நலன் பற்றிய அக்கறைகளையும், நல்லனையும் வெளிப்படுத்தும் பொருட்டு, சமுதாயத்தில் சகல மட்டங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் -

அவர்களுக்குரிய கௌரவத்தையும் மரியாதையையும் வழங்கும் வகையிலும் -

பிரதேச மட்டத்தில் முதியோர் வாரத்தில் வைபவங்களை ஒழுங்கு செய்து நடத்துதல் வேண்டும்.

இந்நிகழ்ச்சிகளில் முதியோர் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகங்கள், பேச்சுக்கள் மற்றும் அறிஞர்களின் கருத்துரைகள் இடம்பெறல் வேண்டும் - என்று அதில் உள்ளது.

(எ-76)

# மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் மாகாண மட்டத்திலும் நிறுவப்படும்

## பிரதம நீதியரசர் அறிவிப்பு

கொழும்பு,செப்.8

மாகாண மட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

மத்தியில் உள்ள அதிகாரங்களை மாகாண மட்டத்துக்குப் பரவலாக்கும் நோக்குடன், இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முறையீட்டு நீதிமன்றங்களின் அதிகாரங்களை பரவலாக்குவதன் மூலம், தற்போது கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குவியும் ஏராளமான வழக்குகளில் வழக்காடுபவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை குறைக்கக் கூடியதாக இருக்கும்.

நாடளாவிய ரீதியில் மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்ட பின் முறையீட்டு நீதிமன்றங்களின் எந்தவொரு கிளையும் முறையீட்டு நீதிமன்றங்களாகவே இருக்கும்.

தற்போது செயற்படாத முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களைத் தவிர, நாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறுகின்றன.

சட்டப் பிரச்சினைகளை நாகரிகமான முறையில் தீர்த்துவைப்பதில், நீதிமன்றங்கள் சுமுகமாக செயற்பட்டு வருவதை பாராட்டுவதற்கு நாம் பின்னிற்கப் போவதில்லை.

நாட்டிலுள்ள பெரும்பாலான நீதிமன்றக் கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் இருப்பதை அவதானித்துள்ளோம். அவற்றை புனருத்தாரணம் செய்யவோ, அவசியமேற்படின் மீளமைக்கவோ உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (எ-3)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு,செப்.8

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் நிறைவேற்றுத் தரத்தில் தொழில்வாய்ப்பு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்தறையில் நடைபெற்ற கைத்தொழில் கண்காட்சியினை ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிரமங்களுக்கு மத்தியில் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதுடன் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான வேதனத்தை அதிகரிக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. நிதி அமைச்சர் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் நிறைவேற்றுத் தரத்தில் வேலைவாய்ப்பை வழங்கவும், சுய தொழில் உதவிகளை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க எடுத்துள்ளார். இந்த மாதம் இறுதிக்குள் தனியார்துறையினருடன் பேச்சுக்கள் நடத்தப்படும் - என்றார்.

இதேவேளை- ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு இம்மாதம் 15 ஆம்திகதி முதல் தனியார் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

(எ-6-12)

**நாளை**

ஆவணி 23
செவ்வாய்க்கிழமை
(09.09.2003)
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 10.42 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 5.04 வரை
சுபநேரம்: 10.33 - 12.03
ராகுகாலம்: 3.03 - 4.33
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தீர்மானமுள்ள மனிதன் துன்பத்தை பொருட்படுத்த மாட்டான்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியின் மத்தியில்

# பஸ் நிலையம் முன்பாக வாகனங்கள் அதிகளவு தரிப்பதால் இடைஞ்சல்

## போக்குவரத்துச் சபை சாரதிகள் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ். பஸ்நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் நடுவில் தரிக்க விடப்படும் தனியார் வாகனங்களால் போக்குவரத்துச் சபை பஸ்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ், நிலையத்துக்குள் நுழையும் போதும், அங்கிருந்து வெளியேறும் போதுமே பஸ் சாரதிகள் நெருக்கீடுகளை எதிர்கொள்வதாகக் கூறப்பட்டது.

பஸ் நிலையம் முன்பாக - யாழ். ஆஸ்பத்திரி வீதியில் - வாடகை மோட்டார்க்கார்கள் தரித்து நிற்க அனுமதியளிக்கப்பட்டது. அத்துடன், கச்சேரிக்குச் செல்லும் இரண்டு தனியார் மினிபஸ்கள் மட்டும் தரித்து நிற்கவும் அனுமதியுண்டு.

ஆனால், நகரப்பகுதிக்கு தனிப்பட்ட தேவைகளுக்காக வருகை தரும் தனியாரும் தமது வாகனங்களை அவ்விடத்தில் நிறுத்தி வருவதனால் இத்தகைய நெருக்கீட்டுநிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக போக்குவரத்துப் பொலீஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - எதிர்பார்க்கப்படுகிறது.(எ-9)

உரும்பிராய் விநாயகர் ஆலயத்தின்

# சித்திரத்தேரில் இருந்த 12 யாழிகள் திருட்டு!

இணுவில்,செப்.8

உரும்பிராய் மேற்கு கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தின் சித்திரத்தேரில் பொருத்தப்பட்டிருந்த பன்னிரண்டு யாழிகள் திருட்டுப்போயுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் நடைபெறவுள்ள வருடாந்த தேர்த்திருவிழாவினை முன்னிட்டு தேரினை துப்புரவு செய்வதற்காக கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் தேர்க்கொட்டகையை ஆலயத் தொண்டர்கள் திறந்தனர்.

அந்தச் சமயமே பெறுமதி வாய்ந்த யாழிகள் திருட்டுப் போனமை தெரியவந்தது.

நூறு வருடங்களுக்கு மேற்பட்ட இந்தத் தேரினது யாழிகள் திருட்டுப்போனமை குறித்து ஆலய பக்தர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை - மேற்படி ஆலயத்துக்கு அருகில் உள்ள முருகன் ஆலயத்தின் சித்திரத்தேரில் இருந்த சிற்பங்கள் கடந்தமாதம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே, தொடர்ந்து ஆலயங்களில் உள்ள அரும் பொருள்கள் களவாடப்படுவதைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள், உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-49)

வடமராட்சி கிழக்கு
பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தினால்
நடத்தப் பெற்ற

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இலக்கம்: 2526
இரண்டாம் பரிசு இலக்கம்: 2379
மூன்றாம் பரிசு இலக்கம்: 0095
*ஆறுதல் பரிசுக்கான இலக்கங்கள்:*
0047 0859 2938
1087 1939

பரிசுகளை எமது ஒன்றிய உபஅலுவலகத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

(22339)(26-13-18-27) -ஒன்றியத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1957 - 09 - 17



உதிர்வு 1998 - 09 - 08

### அமரர் வேலுப்பிள்ளை யோகநாதன்

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்,
விவசாயப்பயிற்சி பாடசாலை, திருநெல்வேலி)

அன்புடனும் பண்புடனும்
அனைவரோடும் பழகிடும்
பாசமுள்ள நேசமுள்ள
எம்அருமைச் சித்தாவே!
எம்மையெல்லாம் பிரிந்து நீர்
எங்கு சென்றீர் ஐயா?
வருடங்கள் ஐந்து - இங்கு
உருண்டோடி விட்டனவே!
உங்கள் அன்பு முகம் காணாது
தவிக்கின்றோம் நாம்.

*சரசாலை தெற்கு,*
*சாவகச்சேரி.* (22221)(26-18-13-27)

மனைவி, சகோதரர்,
மைத்துனர்கள்.


# புரோட்டினெக்ஸ்®

நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது.

100% தாவரப் புரதம்
கொலஸ்ரோல் அற்றது
15 விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது.





180g 100g

போஷணைகள்: புரோட்டீன், விற்றமின் A, விற்றமின் C, விற்றமின் D3
விற்றமின் E, விற்றமின் K3, விற்றமின் B1, விற்றமின் B2,
விற்றமின் B6, விற்றமின் B12, நயசினமைட், D-பன்தனோல்,
பயோட்டின் (f)போலிக்கமிலம், கல்சியம், பொஸ்பரஸ்,
இரும்பு, கோலின், மோல்ட்.

Astron — Astron Limited., 688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel : 636741 Fax: 636173 E-mail: astron@astron.lk


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு

(M.T.திருநாவுக்கரசு)

[இராஜேந்திரா ஸ்ரோர்ஸ், 192, கே.கே.எஸ் வீதி, யாழ். - முன்னாள் உரிமையாளர்,
கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலய முன்னாள் பஞ்சகர்த்தா,
அரசமரக் கூட்டுத்தாபன முன்னாள் ஒப்பந்தகாரர்]

மண்ணுலகில் 07.09.1921

விண்ணுலகில் 09.08.2003

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கே!
எமது வாழ்வை வளமாக்க
அல்லும் பகலும் பாடுபட்ட
அன்புத் தெய்வமே - ஒரு திங்கள்
சென்றாலும் என்றென்றும்
எங்கள் இதயத்தில் உங்கள்
நினைவுகள் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியம் இன்று (08.09.2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

201, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0712355312

(22325) (25-18-13)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

# காத்தான்குடியில் ஆயுதப் பயிற்சியா? பள்ளிவாசல்கள் சம்மேளனம் மறுப்பு

## உள்துறை அமைச்சு செயலாளருக்கு கடிதம்

முஸ்லிம் இளைஞர்களிடையே ஆயுதக் குழுக்கள் உருவாகி வருகின்றன என்றும், காத்தான்குடியில் ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுகின்றது என்றும், ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் தவறானவை என்றும், காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

ஆயுதப்பயிற்சி அளிப்பதற்கு காத்தான்குடியில் இடவசதி கூட இல்லை. இந்த உண்மை நிலையை அறிந்து ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டு அனைவரது சந்தேகத்தையும் நீக்குமாறு உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட்டை சம்மேளனம் கேட்டுள்ளது.

சம்மேளனத்தின் தலைவரும் செயலாளரும், கையெழுத்திட்டு அமைச்சு செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். கடிதம் வருமாறு:-

கடந்த வாரம் வெளிவந்த சில ஆங்கில, சிங்கள தினசரிப் பத்திரிகைகளிலும், பல தமிழ் பத்திரிகைகளிலும், வானொலியிலும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர்களிடையே ஆயுதக்குழுக்கள் உருவாகுவதாகவும், அவர்களுக்கு கரையோரக் கிராமங்களில் ஆயுதப்பயிற்சி அளிக்கப்படுவதாகவும், குறிப்பாக காத்தான்குடியில் இப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இவற்றின் மூலச்செய்தி 'சண்டே டைம்ஸ்' 24.08.2003 இதழில் வெளிவந்தது. இந்தச் செய்தியில் ஆயுதக் குழுக்களின், ஆயுதப் பயிற்சிகள் தொடர்பாக அரசாங்கப் புலனாய்வு அறிக்கை உள்ளதாகவும் இவ்வறிக்கையை தாங்கள் ஊர்ஜிதப்படுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

காத்தான்குடியில் ஆயுதக்குழுக்கள் உள்ளனவா? ஆயுதப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பாக நாங்கள் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காத்தான்குடியின் அமைப்புப் பற்றி தாங்கள் அறிவீர்கள். நாங்கள் அறிந்துள்ளவாறு காத்தான்குடி தென்கிழக்காசியாவிலேயே சனநெருக்கடி மிகக் கூடிய ஒரு பிரதேசமாகும். கொழும்பு மாநகரத்துக்கு அடுத்ததாகக் காத்தான்குடியிலேயே காணிகளின பெறுமதி மிக அதிகமாக உள்ளது.

கடல், ஆறு, ஆரையம்பதி கிராமம், மஞ்சந்தொடுவாய் கிராமம் ஆகிய நான்கு எல்லைக்களுக்கிடையிலுமுள்ள ஒரு சதுர மைல் பரப்புள்ள காத்தான்குடிக் கிராமத்தில் சுமார் பத்தாயிரம் குடும்பங்கள் - நாற்பதாயிரம்) மக்கள் வாழ்கின்றனர்.

காத்தான்குடியைப் பார்க்கின்ற எவருக்கும் இங்கு கால் ஏக்கர் நிலத்தைக்கூட வெற்று நிலமாகக் காண்பது அரிது என்பதும் முழு இடங்களிலும் குடும்பங்களே வாழ்கின்றன என்பதும் மிகத் தெளிவாக விளங்கும்.

மேலும், காத்தான்குடியின் கிழக்கில கடலும் அதை அண்டிய கடற்கரையும் உள்ளன. காத்தான்குடி மக்களுக்கு உள்ள ஒரே ஒரு பொழுது போக்கிடம் இக்கடற்கரைதான். இந்தக் கடற்கரை நெடுகிலும் தெளிவான தார் வீதி உண்டு. வெளிச்ச வசதியும் உண்டு. பகல், இரவு நேரங்களில் - பிந்திய இரவு நேரங்களில் கூட பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தக் கடற்கரையில் தங்கள் பொழுதுகளைப் போக்குகின்றனர். காத்தான்குடிக்கு வரும் அநேக லொறிகள் இந்தக் கடற்கரையோரங்களிலேயே தரித்து நிற்கின்றன. மீனவர் தங்குமிடங்கள் நிறையவே உண்டு.

பல்லாயிரக்கணக்கான தமிழ் சகோதரர்கள் தினசரி காத்தான்குடியில் வேலை செய்கின்றனர். இரவு நேரங்களில் வேலை செய்பவர்களும் பலர் உள்ளனர்.

இந்த நிலையில் ஆயுதப் பயிற்சிக்கு அறவே சாத்தியமற்ற ஓர் இடமாகிய காத்தான்குடியில் ஆயுதக் குழுக்கள் உள்ளன என்ற செய்தியும் ஆயுதப்பயிற்சிகள் நடைபெறுகின்றன என்ற செய்தியும் எங்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

காத்தான்குடியில் ஆயுதக்குழுக்கள் நடமாடுவதற்கும் அதற்கு மேலாக ஆயுதப்பயிற்சி அல்லது போராட்டப் பயிற்சி அளிக்கப்படுவதற்கும் தேவைப்படும் நிலப்பரப்பு அறவே கிடையாது. அப்படி ஏதும் நடைபெறுவதாக இருந்தால் அது பகிரங்க இடங்களில் அதிக மக்களின் பார்வைக்கு உட்பட்டதாகவே நடைபெறுதல் வேண்டும். இது சாத்தியமான ஒன்று அல்ல - என்று அதில் உள்ளது.

(எ)

# தென்னையின் குருத்து யானைமுக வடிவில்!

## வதிரிப் பகுதியில் ஆச்சரியம்!!

கரவெட்டி, செப்.8

ஒரு வருடத் தென்னம்பிள்ளை ஒன்றின் குருத்து, யானையின் முக அமைப்பில் உருவாகியுள்ளது.

வடமராட்சியின் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் உள்ள கதிரவேலு விவேகானந்தன் (மணி) என்பவரது வீட்டிலேயே இந்த ஆச்சரியத்தைத் தரும் தென்னம்பிள்ளை காணப்படுகிறது.

தென்னம்பிள்ளையின் அடிப் பகுதியிலிருந்து இந்த யானை முக அமைப்பு வெளிவந்து காணப்படுகிறது.

பெருமளவான பொதுமக்கள் இந்தத் தென்னம்பிள்ளையைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். விநாயகரின் இயற்கைப் படைப்பு இதுவெனக் கூறி அப்பகுதி மக்கள் அந்த உருவத்தினை வழிபடுகின்றனர்.

சாதாரண தென்னம் பிள்ளை போலவே வளர்ந்து வந்த இந்தத் தென்னம் பிள்ளையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னரே மேற்படி மாற்றம் தென்பட்டதாக அதன் உரிமையாளர் கூறினார். (எ-9-70)

# இந்திய மீனவரின் படகுகளை துப்புரவு செய்ய அனுமதி

## மல்லாகம் நீதிமன்று வழங்கியது

யாழ்ப்பாணம்,செப்.8

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவரின் படகுகளைத் துப்புரவுசெய்ய மல்லாகம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரு இந்திய மீனவர்கள் சமர்ப்பித்த மனுமீதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு இந்திய மீனவர்கள் மல்லாகம் நீதிவான் முன் கடந்த வெள்ளியன்று ஆஜர். செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது படகுகளை துப்புரவு செய்யவேண்டியுள்ளது. துப்புரவு செய்யாவிட்டால் அந்தப் படகுகள் பழுதடைந்து விடும். எனவே, படகுகளை துப்புரவு செய்ய அனுமதிக்கவேண்டும் என்று அந்த மீனவர்கள் தமது மனுவில் கோரியிருந்தனர்.

இந்த மனுவை ஏற்று இதற்கு அனுமதி வழங்கிய நீதிவான், மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-3)

# தரம் பதினொன்று மாணவருக்கு ஆங்கிலப் பாடப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ். கல்விவலய பாடசாலைகளில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஆங்கில பாடப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையில் யாழ். கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த சகல தரம் 11 மாணவர்களையும் தோற்றுமாறும் -

மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவர்களை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டுமெனவும் -

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதேவேளை -

பாடசாலை மட்ட தரம் 11 மாணவர்களுக்கான கணிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல் கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் -

இக்கூட்டத்தில் யாழ். கல்வி வலயத்தின் தரம் 11 வகுப்புகள் உள்ள பாடசாலைகளின் அதிபர்களையும் மற்றும் கணிப்பீட்டுப் பொறுப்பாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் -

அவர் கேட்டுள்ளார். இக்கூட்டத்தில் வைத்து, பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கணிப்பீட்டுப் புள்ளிப் படிவங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் -

கூட்ட முடிவில் நாளை நடைபெறும் ஆங்கிலப் பாடப் பரீட்சைக்குரிய பொதி செய்யப்பட்ட வினாத்தாள்களை பொறுப்பேற்றுக் கொள்ள முடியும் எனவும் - அவர் தெரிவித்தார். (எ-9)

# கணவனுக்கும் மனைவிக்கும் தீக்காயம்!

தென்மராட்சி,செப்.8

நான்கு வயது மகன் 200 ரூபாவினைத் தொலைத்ததால் வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக இளம் தாய் மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிக் கொண்ட சம்பவம் மீசாலை கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் மாலினி (வயது -26) என்பவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளானார். இவரைக் காப்பாற்ற முயன்ற இவரது கணவரான கனகசபை பத்மநாதன் (வயது 32) என்பவரின் கைகளும் தீயில் வெந்தன.

எரிகாயங்களுக்கிலக்கான இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (எ-117)

# லாபப்பங்கு வழங்கக் கோரிக்கை

சங்கானை,செப்.8

பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க வெதுப்பக ஊழியர்களுக்கு பதினெட்டு மாதங்களாக லாபப் பங்கு வழங்கப்படவில்லை என ஊழியர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் 2001 ஆம் ஆண்டு பொதுச் சபைக்கூட்டத்தில், சங்கத்தினால் நடத்தப்படும் வெதுப்பகத்தின் மூலம் கிடைக்கும் 25 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தில் மூன்றில் ஒருவீதத்தினை ஊழியர்களுக்கு லாபப் பங்குப் பகிர்வாக பிரித்து வழங்குவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது என்றும் -

ஆனால், ஊழியர்களுக்கான லாபப்பங்கு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

லாபப்பங்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக இயக்குநர் சபைக்கு பேக்கரி ஊழியர்கள் கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளனர். (எ-29)


# கல்விச்சாலைக் காட்சிகள்



கொக்குவில் மேற்கில் தென்னிந்திய திருச்சபையினால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது மாணவர்கள் கொடி நடுதல் போட்டியில் பங்கு கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். (எ)



கொடிகாமம் மத்தி முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது, நிகழ்வின் தலைவர் அ.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் காணப்படுகின்றார். (எ)



கச்சாய் வினோபா முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ)



கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடல் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பேராசிரியர் மா. சின்னத்தம்பி, தென்மராட்சிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் ஆகியோரை அதிபர் த.கந்தையா மண்டபத்துக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம். (எ-10)

75ஆவது ஆண்டில்

# யாழ் அடைக்கல அன்னை ஆலயம்

# பவளவிழா சிறப்பிதழ் 08.09.2003

1928-2003

## ஆயரின் ஆசிச்செய்தி



அன்புச் சகோதரர்களே,

புனித யோவானின் நற்செய்தி குறிப்பிடும் இயேசுவின் இறுதி வார்த்தைகளில் ஒன்றான "இதோ உன் தாய்" என்பதின் வரலாற்று அடையாளமும், அர்த்தமும் அடைக்கல அன்னையாகும். யாழ். திருச்சபை அடைக்கல அன்னையின் பெயரில் கொண்டுள்ள உறுதியும் அன்னை சுட்டிக்காட்டும் இயேசுவின் மீது கொண்டுள்ள பற்றுறுதியின் வரலாற்றுச் சின்னமாகிய அடைக்கல அன்னையின் புதிய ஆலயத்தின் 75 ஆண்டுகளை கொண்டாடுவதில் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு பேருவகை அடைகின்றேன்.

எமது மண்ணில் இறை விசுவாசம் ஊன்றப்பட்ட பொழுது அன்னை மரியாவின் ஆழமான பற்றுறுதித் தனத்திலேதான் விதைக்கப்பட்டது என்பது வரலாறு. வரலாற்றில் உருவான சோதனைகளும் கலாபனைகளும் எமது மக்களின் விசுவாச வாழ்வை உடைக்கமுடியவில்லை. அன்னை மரியாவின் பரிந்துரையும் அடைக்கலமும் இச்சிறிய தீவில் விசுவாசத்தைக் காத்தது. எமது யாழ். பிரதேசம் அன்னை மரியாவில் கொண்டுள்ள பாதுகாவலின் அடையாளமாக அடைக்கல அன்னை விழாவின் பூர்வீகத்தைக் காணலாம்.

போர்க்கால மேகங்கள் கலைந்த சமாதானக் கீற்றுக்கள் தென்படும் நம்பிக்கையின் காலத்தில் அன்னையின் விழா எமது பற்றுறுதியையும், ஆன்மீக வாழ்வையும் புதுப்பிக்க வேண்டும். போர்க்கு பின் நெறியற்ற வாழ்வும் தடையற்ற ஆடம்பரகுவிப்பும் சமாதானத்தின் போக்கை கேள்விக் குறியாக்குகின்றது. அமைதி என்பது ஒப்புரவு, புதிய எதிர்பார்ப்பு எனவே அன்னை வரலாற்றில் காட்டிய வழி புனித யோவானின் நற்செய்தியில் சுட்டிக்காட்டிய இயேசுவின் வழி... அவ்வழிதான் ஒரே வழி, அமைதியின் வழியாகும்.

**இறைபணியில் உங்கள் ஆயர்**
**பேரருள்திரு. தோமஸ்சவுந்தரநாயகம்**
**யாழ். ஆயர்.**



## பங்குத் தந்தையின் செய்தி



அன்பு நெஞ்சங்களே,

பவளவிழாக் கொண்டாடும் புதிய அடைக்கல அன்னை ஆலயத்தின் பெருவிழா பல நூற்றாண்டுகள் கண்டுகளித்த திருவிழாவென்று சரித்திரம் கூறுகின்றது. மண்கோவிலாக உருவாகி, ஒல்லாந்தரின் வேதகலாபனையின் போது மறைந்திருந்து, 1928ஆம் ஆண்டு கற்கோவிலாக மிளிர்ந்தது. 1928 ஆம் ஆண்டு புதிய ஆலயமாக அழகாக அமைப்புப் பெற்று அபிஷேகம் செய்யப்பட்டது.

*பற்பல நிகழ்வுகளின் ஊடாக கத்தோலிக்கத் திருச்சபை*யின் தலைவராகிய பாப்பரசர் திருத்தந்தைக்கும் மறை மாவட்டத்தின் தலைவராகிய பேரருட்திரு. ஆயர் ஆண்டகைக்கும் பங்கின் தலைவராகிய அருட்தந்தையர்க்கும் என்றும் பிரமாணிக்கமாகவும், அன்பாகவும், ஆதரவாகவும் அவதரித்த பல தலைமுறைகள் வாழ்ந்த பங்கு மக்களையும் இத்தருணத்தில் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

"இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறு பெற்றவர் என்பர்" (லூக்கா1:48) என்னும் ஆகமத்தின் பொன்மொழிகளுக்கு இணங்க, மக்கள் இந்த ஆலயத்தைத் தரிசித்து, புகழ்பாடி, மரியாளின் பரிந்துரையினால் பெற்றனுபவித்த கொடைகளுக்காக நன்றி கூறுவதை நாளாந்தம் பார்த்துப் பரவசமடைகிறேன்.

வெவ்வேறு வயதினர் பலநூறப்பட்ட பக்திச் சபைகளின் வழியாக தலத்திருச்சபையின் வளர்ச்சியில் ஆர்வமுடன் பங்கேற்பதையும் வரவேற்கின்றோம். ஆலயத்தின் மேம்பாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து உதவுவதையும் கண்டு களிப்புறுகின்றேன்.

அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான் 2:5) என்ற மரியாள் கூறியது போல, நாமும் யேசுவின் அழைப்பிற்கு ஏற்றவாறு வாழ்வோமாக. மரியே வாழ்க!

**தவத்திரு.ம.இம்மானுவேல் பயஸ்**

## வரலாறு பேசுகின்றது

[illegible] யாழ். அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R) ஆகும். இந்த ஆலயம் [illegible] 75 ஆண்டுகள் [illegible]

### முதல் ஆலயம்

[illegible]

### இரண்டாவது ஆலயம்

[illegible]

### மூன்றாவது ஆலயம்

[illegible]

[illegible] 1909 ஆம் ஆண்டு [illegible] 1914 ஆம் ஆண்டு [illegible] J.M.C [illegible] 1923 [illegible] (1923-1929) [illegible] 1928 ஆம் ஆண்டு [illegible] M.P. [illegible]

### ஆலயத்தின் வளர்ச்சி

1948 ஆம் ஆண்டு [illegible] 1932 ஆம் ஆண்டு [illegible] J.F. [illegible] K. [illegible] 1974 [illegible] (1981-1986) [illegible] 1984 [illegible] (1986-1996) [illegible]

[illegible] R. [illegible] 1993 [illegible] J. [illegible] 1999 [illegible] 2000 [illegible] J.P.E [illegible] 31.01.2000 [illegible] 1955 [illegible] 1978 [illegible] 7.00 [illegible]

தொகுப்பு:- அருட்தந்தை ம.த.சந்திரன்.


**சிறி கருமாரி நகையகம்**
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021-222 5385

**FLASH CD HOUSE**
பிளாஷ் சீடி ஹவுஸ்
சகலவிதமான வீடியோ, ஒடியோ தேவைகளை நிறைவு செய்துகொள்ள நாடவேண்டிய இடம்.
இல.640, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.0777 162347
Rammy ஒடியோ சீடிகள் விற்பனைக்கு உண்டு.

**றோயல் அழகு மாடம்**
சகலவிதமான அழகுசாதனப் பொருள்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள ஸ்தாபனம்.
இல.17, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

**பொன்னரசி நகையகம்**
Bonnatasy nakaijagam
76A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.0777 066427

**ஸ்ரார் தையலகம்**
Star Tailors
636, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Proprietor: T.Tharshan.

**முத்துமாரி நகை மாடம்**
Mutthmaary Nakaimaadam
நவீன டிசைன் நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட நாடுங்கள்
78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777 737022

**Power Cellular**
Table Phone, Hand Phone, Kit Card, Antenna pin, Phone cover, Battery Charger, Cash card and all Phone Parts
1st Fleat, No: 185, Kasthuriyar Road, Jaffna.
T.P No: 0777 242416, 0712 399220
Fax No: 0712 381125
E-mail: power@cl.lk

**அன்ரனி பைல்ஸ் இலத்திரனியல் வேக்சொப்**
பிளம்பிங், வயறிங், வெல்டிங், மீலி வேலை, சகலவிதமான வேலைகளும் செய்துதரப்படும்
அன்ரனி பாலசிங்கம்,
24, 2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.
தொ.இல.021-222 2273

**மொறிஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்**
சகலவிதமான மணிக்கூடுகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் திருத்திக்கொடுக்கப்படும்.
இல. 64/a, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: S.மொறிஸ்ஜோய்.

**யூட்பிறதஸ் வெல்டிங் வேக்ஷொப்**
அனைத்து வகையான வெல்டிங் வேலைகளும் நுட்பமான முறையில் துரிதமாகச் செய்துகொடுக்கப்படும்.
இல.344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ம.பேணாட்ஷோ.

**DHARSHI Communication and Vidio Vishon and Van for Hire**
No. 250, Kerawallapittiya Junction, Hendana Road, Wattala
T.P: 01 2941473 Fax: 012941472
K.Thilagesvaran.

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ பிடவை மாளிகை**
13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3139

**ரட்ணா பலசரக்கு மாளிகை**
718, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**திரு.எட்வேட் ராசு**
2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**சசிகாந்தன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்கு விற்பனை நிலையம்
380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**LIFE STUDIO லைவ் ஸ்ருடியோ & தொலைத் தொடர்பகம்**
கலர், கறுப்பு/ வெள்ளை படங்களை அரைமணி நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
குறைந்த கட்டணத்தில் தொலைத் தொடர்பு வசதி, தொலைபேசி, தொலை நகல்
இல:9, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-222-6334, 0777 570400

**சரவணாஸ் ஒலிப்பதிவு கலையகம்**
பழைய, புதிய பாடல்களை CDயிலும் கசற்றிலும் தெளிவாகப் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.
750, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

**சுவீற்றி இன்டஸ்ரீஸ்**
சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்ட சுவையான நெல்லிரசத்தை பெற்றுக்கொள்ளலாம்.
729, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: J.கெங்கேஸ்வரன்
தொ.இல: 0777 5795 68

**திருப்பதி மருந்தகம் (புதிய இரட்ணம்)**
சகலவிதமான ஆங்கில மருந்துகளும், பால்மா வகை மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கு நிறைவான இடம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தர்சிகா ஸ்ருடியோ அன் வீடியோ**
இல: 215, ஆஸ்பத்திரி வீதி, முஸ்லிம் சந்தி, யாழ்ப்பாணம்.
எம்மிடம் பந்தல், மணவறை, தலைப்பாகைகள், தலைநகை, செட் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்
கேக் ஐசிங், மேக்கப் செய்திடவும் தொடர்பு கொள்ளவும்.

# டாக்டர்கள் பயிற்சிக்காக தெற்கே ஓடும் நிலைமை ஏன் வந்தது?

யாழ். பல்கலைக்கழகத்தில கற்று வைத்திய பட்டதாரிகளாக வெளிவருபவர்கள் தென்பகுதி வைத்தியசாலைகளுக்கு ஓடுகிறார்கள். இக்கருத்து இன்று நேற்றல்ல கடந்த பல வருடங்களாகவே இருந்துவருகிறது.

இது அம்மருத்துவப் பட்டதாரி மாணவர்களின் மனத்தினை வேதனைப்படுத்துவதுடன்; யாழ். குடாநாட்டு மக்




களின் மனத்தில் அவர்களைப் பற்றி நியாயமற்ற ஒரு தப்பபிப்பிராயத்தையும் ஏற்படுத்துவதாகும்.

யாழ். வளாகத்திலிருந்து வெளியேறும் மருத்துவப் பட்டதாரிகளில் அநேகமானவர்கள் குடாநாட்டைச் சேர்ந்தவர்களே. இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலும்; குடாநாட்டிலுள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் சேவையாற்ற முடியும். அப்படியிருக்க உள்ளக பயிற்சிக் காலத்தில் இவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தைவிடக் கூடுதலான பணத்தினைச் செலவு செய்து; கொழும்பு, ராகம, கண்டி, பேராதனை, காலி போன்ற நகரங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு ஏன் போக வேண்டும்?

இன்று இலங்கை முழுவதுமாக உள்ள பல்துறை தோய்ந்த வைத்திய நிபுணர்களில் தமிழர்கள் மிகக்குறைவான விகிதத்திலேயே உள்ளனர். உதாரணமாக மகரகம புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் அந்நோய்க்குரிய நிபுணர்களில் (RADIO THE-RAPISTS) Dr.(Mrs.) K.V.U.Pillai (திருமதி வாணி பிள்ளை) மட்டுமே தமிழர். தற்போது யாழ். வளாகம் உருவாக்கி; யாழ்.போதனா வைத்தியசாலையில் சில வருடங்கள் சேவையாற்றிய ஓரிரு வைத்தியர்கள்; அத்துறையிற் தேர்ச்சி பெற்ற மிகச் சிறந்த வைத்திய நிபுணர்களிடம் பயிற்சி பெறுகிறார்கள்.

இது ஓர் உதாரணம் மட்டுமே. யாழ்ப்பாணத்தில் சேவையாற்றிய பலர், நிபுணத்துவத் தகுதி பெறுவதற்குரிய பரீட்சையில் சித்தியடையாமல் இருந்து, தென் பகுதிக்குச் சென்ற ஒரு வருடத்தில் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது சிறந்த வைத்திய நிபுணர்களின் கீழ் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாழ். மண்ணில், தம் மக்களுக்குச் சேவையாற்ற மீண்டும் வருவார்கள். வந்திருக்கிறார்கள்.

இவர்கள் நன்றி மறந்தவர்களா? ஐயாயிரமாண்டு தமிழர் கலாசாரமும் யாழ்.மக்களின் நன்றி மறவா இயல்பும் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்றால் இந்த வைத்தியப்பட்டதாரிகள் தற்போதைக்கு தெற்குநோக்கி ஓடியே ஆக வேண்டும்.

**மு.நா.நடராசா**
**நயினை**

மனிதர்கள் நோயற்றவர்களாக சுகதேகிகளாக இருந்தால்தான் எதையுமே செய்யமுடியும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு வைத்தியப் பட்டதாரியை, ஒருதுறை சார்ந்த வைத்திய நிபுணராக்குவதற்குரிய வளங்கள் மிகவும் குறைவு. இக்குறை நிவர்த்தி செய்யப்பட்டால் இவர்கள் தெற்கு நோக்கி போக வேண்டியது அவசியமில்லை.

இதை யார் செய்வது?

எம்மை ஆளுகின்றவர்கள் இதுவரை இதைச்செய்யவில்லை. அவர்கள் செய்யமாட்டார்கள். எனவே தான் நாம் ஆளுகின்றவர்களாக வேண்டும் என்று கேட்கிறோம்.

மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில், பேராசிரியர் குணாநந்தன் அவர்கள் குறிப்பிட்டிருந்த; அவரது நரம்பியல் நிபுணத்துவத்தை சிலரது அழுத்தம் காரணமாக அங்கீகரிக்க மறுத்த வைத்திய பட்டப்பின் படிப்பு நிறுவனப் பணிப்பாளரின் கூற்றாகும்.

பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டிருந்தவற்றின் உண்மைத்தன்மை சந்தேகத்திற்கு இடமற்றது. எனவே, சுகாதார அமைச்சின் செயலாளருக்கும், வைத்திய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளருக்கும் அழுத்தம் கொடுத்தவர்கள் யார்? ஏன் அவர்கள் அப்படிச் செய்தார்கள்? இதற்குரிய விளக்கத்தினை அவர்கள் தருவார்களா? தரமுடியாவிடில் இனிமேலாவது இப்படியான கைங்கரியங்களைச் செய்யாதிருக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## முன்னோடி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.8

சர்வோதயம் அமைப்பினால் செயற்படுத்தப்படவுள்ள வறிய மக்களின் பொருளாதார அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முன்னோடிக் கருத்தரங்கு எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 5மணி வரை சர்வோதயத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிராம மட்ட சர்வோதய சிரமதான சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்கள் மற்றும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-4)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

ஊர்காவற்றுறை,செப்.8

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து சமாசம் ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊர்காவற்றுறை அரசியல் துறைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மேற்படி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-16)

## கல்வி நிர்வாக சேவையினருக்கு சம்பள உயர்வு வழங்கவேண்டும்

### அமைச்சரிடம் சங்கம் கோரிக்கை

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பளம் உடனடியாக மாற்றியமைக்கப்பட்டு இச்சேவையின் தரம் கல்விப் புலத்தில் உள்ள ஏனைய சேவைகளை விட உயர்தரத்தில் பேணப்பட வேண்டும்.

- இவ்வாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கம், கல்வி, கலாசார, மனிதவள அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சங்கத்தின் செயலாளர் டி.கே.ஜயசிங்க கையொப்பமிட்டு அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதிபர், ஆசிரியர்களின் சம்பளத் திட்டத்தைவிட மிகக் குறைந்த சம்பளத்திட்டமே இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் இச்சேவையின் மகிமை குறைத்து மதிப்பிடப்படுகின்றது.

அதிபர், ஆசிரியர்களின் கல்வி, நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்ற இவ்வுத்தியோகத்தர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இது ஓர் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

1994ஆம் ஆண்டு இலங்கை அதிபர் மற்றும் ஆசிரியர் சேவைகளின் சம்பளங்கள் நூறு சதவீதம் அதிகரிக்கப்பட்டபோது இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களது சம்பளம் மாற்றியமைக்கப்படவில்லை.

இது நிர்வகிக்கப்படுபவர்களை விட நிர்வகிப்பவர்கள் குறைந்த சம்பளத் திட்டத்தைப் பெறுவதற்கு வழி வகுத்துள்ளது. இந்நிலைமையை உடனடியாக மாற்றியமைப்பது அவசியமாகும். இப்படி அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. (எ)

## உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக்குடியமரும் வரையும் நலன்புரி நிலையங்கள் அவசியம்

### சமாசக் கூட்டத்தில் தீர்மானம்

இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீளக் குடியமரும் வரையில் தற்போது இயங்கும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை அகற்றுவதற்கு இடமளிக்கப் போவதில்லை என இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் தீர்மானித்துள்ளது.

சமாசத் தலைவர் க.கணேசு தலைமையில் சுன்னாகத்தில் அண்மையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

☆ இடம்பெயர்ந்த மக்களுடைய நலனில் அரச உத்தியோகத்தர்களோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களோ போதிய அக்கறை எடுப்பதில்லை. ஆகவே, நாம் எமது சொந்த இடத்திற்குத் திரும்பிச்செல்லும் வரை தற்போது இருக்கும் நலன்புரி நிலையங்களை அகற்ற அனுமதிப்பதில்லை.

☆ நலன்புரி நிலையங்களில் உள்ள பிள்ளைகளின் கல்வி நிலையை உயர்த்த நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

☆ இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் மழைகாலத்தில் குடியிருக்க முடியாதவாறு சேதமடைந்து காணப்படுகின்றன. எமது உண்மை நிலையை வெளி உலகுக்கு எடுத்துக்காட்ட நடவடிக்கை எடுத்தல்.

☆ அரச காணிகளில் எம்மை குடியேற்ற அனுமதிக்காது இராணுவத்தின் குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய அரச ஊழியர்களின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

☆ சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களை உதவி வழங்குமாறு கோருதல்.

☆ இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் மக்களுக்கு அரசு தவிர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகளை பகிஷ்கரித்தல் - என்பனவே அந்தத் தீர்மானங்கள் ஆகும்.

(எ-9-86)

## வடக்கு ~ கிழக்கு பாடசாலைகளில் ஆங்கிலத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

காரைதீவு,செப்.8

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கில பாடத்தை ஊக்குவிக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் எதிர்வரும் டிசெம்பரில் தோற்றவுள்ள ஜீ.சி.ஈ.சாதாரண மாணவர்களுக்கு முதன் முறையாக விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளது.

அடுத்தவாரம் இவ்விசேட செயற்றிட்டம் மாகாணப் பாடசாலைகளில் அமுல் படுத்தப்படவிருக்கிறது.

விசேட பயிற்சித்தாள் ஜீ.சி.ஈ சாதாரணதர மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அடைவு மட்டம் பரீட்சிக்கப் படும். பின்னர் அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இப்பயிற்சித்தாள் ஜீ.சி.ஈ (சா/த) பரீட்சை வினாத்தாளை அடியொற்றியதாக இருக்குமென உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.அபூபக்கர் தெரிவித்தார். (எ)

## ஆபாசப்பட எதிர்ப்பு இயக்கம்; 'சலன சித்திரம்' விரைவில் நிறுவும்

யாழ்ப்பாணம், செப்.8

திரைக்கலைச்சங்கங்களின் சம்மேளனமான 'சலன சித்திரம்' அமைப்பு, ஆபாசப்பட எதிர்ப்பு இயக்கம் ஒன்றை அமைக்கவுள்ளது.

சலன சித்திரம் அமைப்பின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த மாநாடும் நாளைமறுதினம், கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'எதிர்காலத்தில் இலங்கையின் தமிழ் சினிமாவை ஆரோக்கியமான பாதையில் வளர்த்தல் மற்றும் ஆக்கிரமிப்பு கலை கலாசாரத்தை ஒழித்தல்' என்பன இம்மாநாட்டின் தொனிப் பொருளாகும்.

இம்மாநாட்டிலேயே ஆபாசப்பட எதிர்ப்பு இயக்கம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இம்மாநாட்டில் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் விவரணப்படக்காட்சி ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

(எ-9)

## பரீட்சார்த்த முயற்சி வெற்றி! தென்னிலங்கைக்கு கடலுணவு அடுத்தவாரம் முதல் ஏற்றுமதி

### சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

கடலுணவுகளை தென்பகுதிக்கு விற்பனைக்காக அனுப்பும் நடவடிக்கையை அடுத்தவாரத்திலிருந்து வடமாகாண கடற்றொழிலாளர்களின் சங்கச் சமாசம் மேற்கொள்ளவுள்ளது. ஆயினும் கடலுணவுகளை பதப்படுத்திப் பாதுகாப்பதற்குப் போதுமான ஐஸ்கட்டிகளை தென்பகுதியிலிருந்தே பெறவேண்டியுள்ளது.

- இவ்வாறு சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்தார். இது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நண்பகல் சமாச அலுவலகத்தில் இடம் பெற்றது.

சமாசம் மேற்கொள்ளவுள்ள இந் நடவடிக்கையை சீராக நடத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

ஏ-9 வீதி ஊடாக தென்னிலங்கைக்கு கடலுணவுகளை அனுப்பி வைப்பதற்கான அனுமதியை விடுதலைப் புலிகள் அண்மையில் கடற்றொழில் சமாசத்திற்கு வழங்கியிருந்தனர்.

இதற்கிணங்க அண்மையில் ஒரு தொகுதி கடலுணவுகளை பரீட்சார்த்தமாக தென்னிலங்கைக்கு கண்டி வீதியூடாக எடுத்துச் சென்று விற்பனை செய்ததாகவும்-

அந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்திருப்பதனால் அடுத்த வாரம் முதல் தொடர்ச்சியாக இறால், கணவாய், நண்டு போன்ற கடலுணவுகளை தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் - சமாசத் தலைவர் தெரிவித்தார்.

இக்கடலுணவுகளை பதப்படுத்திப் பாதுகாப்பதற்குத் தேவையான ஐஸ் கட்டிகளை போதுமான அளவில் யாழ்ப்பாணத்தில் பெறமுடியவில்லை எனவும் -

இதனால் அவை தென்பகுதியிலிருந்தே இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் - சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்துக்குச் சொந்தமான காணியில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஐஸ்கட்டி உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கும் பணிகள், யாழ். படைத்தரப்பின் உத்தரவையடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஏற்றுமதித் திட்டம் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும்போது குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் அதிகளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும்- அவர்தெரிவித்தார். (எ-4-9)

## வலி.தெற்கு பிரதேச சபைக்கு புதிய செயலர் நியமனம்

வலி.தெற்கு,செப்.8

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளராக திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகப் பொறுப்பாளராக கடமையாற்றி வந்த திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளராக நியமனம் பெற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

(எ-152)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

பருத்தித்துறை சிந்தாயாத்திரை சித்தி விநாயகர் சின்னப்பிள்ளையார் என விளங்கும் விநாயகப் பெருமானுக்கு இன்று (08.09.03) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

அனைவரும் வருக.

பிரதம குரு:
சிவாச்சாரிய தேவகானபூஷணம்
பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவக்குருமணி
(நல்லூர் சட்டநாதர் கோயில் பிரதமகுரு)

அறங்காவலர்
து.சிவசம்பு.

(22360) (32-14-17)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் பொருளாளராகவும்,
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
விஞ்ஞான ஆசிரியராகவும் கடமையாற்றிய

**திரு. குமாரசிங்கம் குணநாதன்**

அவர்கள் இலங்கை நிர்வாக சேவை
அதிகாரியாகப் பதவியேற்றதையிட்டு
பாராட்டுவதுடன், அவர் மேலும் பல
சிறப்புக்கள் பெற்று உயர வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

கல்விக் கல்லூரி - டிப்ளோமா -
ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(22359) (32-14-17)



## மேலதிக தையற் பயிற்சி

11-08-2003இல் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டிச் செயல் அமர்வின்போது மேலதிக தையற்பயிற்சிக்குத் தெரிவானோர் 08-09-2003 காலை 9.00 மணிக்கு வண்ணார்பண்ணை சீனியர்லேன் கலட்டியில் இல. 16/2இல் அமைந்துள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்திற்குச் சமுகந்தரவும் (பேருந்து வண்டியில் வருபவர்கள் நாச்சிமார்கோவிலடியில் இறங்கவும். அத்துடன், பங்குபற்றுபவர்கள் மதிய உணவினையும் கொண்டுவரவும்.).

யாழ் றோட்டறிக்கழகம்,
நல்லூர் றோட்டறக்ட்கழகம்.

(C-30063) (14-17


## மருதடியில் இன்று நால்வர் சிலை பிரதிஷ்டை

மானிப்பாய்,செப்.8

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சமய குரவர்கள் நால்வரதும் சிலைகள் இன்று காலை 6.45 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

(எ-9-90)

## அடைக்கல மாதா திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.அடைக்கல அன்னை ஆலய பவள விழா நிகழ்வுகள் இன்று காலை 7.30 மணிக்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து பவள விழா மலர் வெளியீடும் இடம்பெறும். யாழ். ஆயர் பவள விழா மலரை வெளியிட்டு வைப்பார்.

(எ-4)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையில் ஓவியப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.8

எதிர்வரும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு பிராந்திய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையில் ஓவியப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

ஒரு முன்பள்ளியானது எவ்வாறான வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அது எவ்வகையான முறையில் அமைவது சாலப் பொருத்தமானது என்ற பொருளில் ஓவியங்கள் வரையப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை அனுப்பிவைக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-4)


## பணி நயப்பு விழா



27 ஆண்டுகளாக யா/வட்டு. மத்திய கல்லூரியில்
ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற்ற அதிபர்

**உயர்திரு. வி.சிவஞானபோதன்**

அவர்களின் பணி நயப்பு விழா

இடம் :- வட்டு. மத்திய கல்லூரி (திறந்தவெளி அரங்கு)
காலம் :- இன்று (08-09-2003) திங்கட்கிழமை
பி.ப. 4.00மணி (புதியநேரம்)

இவ்விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-விழாக் குழுவினர்.

### விழா சிறப்புற வாழ்த்துவோர்:

"கற்கும் மாணவரை சித்தியடைய வைக்கும்"
கணித அறிவு வளர்சோலை
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

K.P.TOURS AND TRAVALS
கேற்றறிங் சேவிஸ்
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
தொலைபேசி:- 0777 111725

ஸ்ரீ ராஜ் தொலைத்தொடர்பகம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
தொலைபேசி:- 070-212343,
070-212620, 021-222 5536

ஸ்ரீ முருகன் களஞ்சியம்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொலைபேசி 021-222 5459

தேவி ரவல்ஸ்
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொலைபேசி:- 0776011092, 021-222 5459



## இடம்மாற்றம் பற்றிய அறிவித்தல்

இல.89, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த நாதன்ஸ் மணிக்கூடு திருத்தகம் இன்று (2003.09.08)முதல் இல.62/34, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள நாதன்ஸ் மணிக்கூடு, வானொலி விற்பனை நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது (பிரதம தபாற்கந்தோருக்கு அருகில்) என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

உரிமையாளர்:
ச.சண்முகநாதன்.

(22355) (32-14-17)



## விற்பனைப் பிரதிநிதி தேவை

இலங்கையில் சந்தைப்படுத்தலில் முன்னணி வகிக்கும் நிறுவனத்திற்கு யாழ்.மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதிகள் உடன் தேவை.

(முன்னனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)

12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 2027
மே/பா உதயன்.

(22353) (32-14-17)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ
03
-
06
-
1982



கண்நெகிழ
09
-
08
-
2003

### அமரர் அருமைத்துரை றணிஸ்கரன்

நினைவுகளில் உன் பிரிவு கனவாக
நிஜமாக உள்ளத்தில் வாழ்கின்ற
அன்பிற்கே எடுத்துக்காட்டாய் வாழ்ந்த
மகனே நீ எங்கே?
உள்ளத்தைக் கனக்க வைத்து
ஊமையாய் உறங்கிவிட்டாய்!
நித்தமும் உன் நினைவில்
கண்ணீராய் கரைகின்றோம்.
ஆறுதல் கூற நீயும் நிஜமாக மாட்டாயா?

*உன் பிரிவால் துயருறும்:*
தந்தை - அருமைத்துரை
தாய் - நேசம்மா
தம்பிமார் - ஜெனிஸ்கரன்,
டெனிஸ்கரன், ரமேஸ்கரன்,
டினேஸ்கரன்.

*தொட்டிலடி,*
*சண்டிலிப்பாய்.* (22357) (32-14-17)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நிறைந்த உள்ளங்களான

**அமரர் தம்பிஐயா ராசகுணசிங்கம்**
**செல்வி யசோதா ராசகுணசிங்கம்**

ஆகியோரின் மறைவு எமக்குப் பேரதிர்ச்சியையும் தீராத வேதனையையும் அளிக்கின்றது. அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்திபெற இத்தியடி விநாயகரின் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*இத்தியடி,*
*சங்கத்தானை.* (22364) (26-14-17) - அபிராமி மகளிர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### செல்லையா சற்குணசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சற்குணசிங்கம் 05.09.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் ஆறுமுகம் செல்லையா - அன்னரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பரராசசேகரம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவஞானவதியின் (கனடா) அன்புக் கணவரும் ஞானகுணசீலன் (செல்வன் - கனடா), ஞானகுணாளன் (குணாளன்), சற்குணவதி (செல்வி), ஞானமனோகரன் (மனோ - கனடா), சிவகுணாளன் (ரஞ்சன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இன்பராஜசிங்கம், செல்வேந்திரன் (U.K.), செல்வேந்திரராணி (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெகதீஸ்வரன் (ஒப்பந்தகாரர்), திரேசா, வத்சலா, விஜயலட்சுமி, வாணிஸ்ரீ ஆகியோரின் அன்பு மாமாவும் மைதிலன், ரதீபன், கௌதமி, நிருஜன், ஹரிதாஸ், சங்கரி, ஜெயசீலன், சஜீபன், பைரவி, வைஷ்ணவி, சங்கவி, சிவசன், வகசன் ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2003) திங்கட்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.ஞானகுணாளன் (மகன்),
து.ஜெகதீஸ்வரன் (மருமகன்).

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (சி-30062) (14-17)

## கண்ணீர்க் காணிக்கை!



எமது அக்கடமி வர்த்தக ஆசிரியர் திரு. Y. விமலன அவர்களின் அன்புத் தந்தையார் **அமரர் செல்லையா யோகேஸ்வரன்** அவர்கள் (அதிபர். புத்தூர் மெ.மி.த.க.பாடசாலை) அகால மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது ஆசிரியரின் துயரில் நாமும் பங்குகொண்டு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
(22366) (32-14-17) **நல்லூர் சயன்ஸ் அக்கடமி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியராகப் பணியாற்றி இலங்கை அதிபர் தரப் பரீட்சையில் சித்தி எய்தி உப அதிபராக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்ற

**அமரர் செல்லையா யோகேஸ்வரன்**
(அதிபர், யா/புத்தூர் மெ.மி.த.க.பாடசாலை)

அவர்களின் எதிர்பாராத பிரிவு எம்மைப் பெருந்துயரில் ஆழ்த்தியது. அன்னாரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில் இந்து ம.வி,
கோண்டாவில்.
(22367) (14-17-32)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
அபி.சங்கம், ப.மா.சங்கம்.

## 8 ஆம் ஆண்டு நினைவு தினம்

### வேலுப்பிள்ளை குருக்கள் நவரத்தின குருக்கள்

எந்தையே!
எம் பாசமிகு தந்தையே!
எமக்கு நல்வழி காட்டிய தெய்வமே!
உம் நினைவு நாளாகிய இன்று
உம் ஆசி வேண்டி நிற்கும்!

"நமிலாஸ்"
நெல்லண்டை,
பருத்தித்துறை.
(22354) (32-14-17) —குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 12 - 05 - 1939



இறப்பு 10 - 08 - 2003

### திருமதி காசிப்பிள்ளை தெய்வானை

அன்போடு எம்மை ஆதரித்து அரவணைத்த தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்!

சிவபதமடைந்த எமது குல விளக்கின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகளும் அந்தியேட்டியும் இன்று (08.09.2003) திங்கட்கிழமை எமதில்லத்தில் நடைபெறுகின்றன. எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுவதுடன் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*
(C/30070) (32-14-17) - குடும்பத்தினர்.

## 13ஆம் ஆண்டு நினைவு நாள்

விழுதானது **வீரவணக்கம்** வித்தானது

17 - 11 - 1975



02 - 09 - 1990

### வீரவேங்கை சின்னக்காச்சி
(பஞ்சலிங்கம் தயானந்தன்)

ஆண்டுகள் பதின்மூன்று சென்றாலும்
உந்தன் பொன்முகமும் பொன்சிரிப்பும்
எம்மைவிட்டு நீங்காது.

நீர்வேலி.
(22365) (14-17-32) -குடும்பத்தினர்.

## சாயிசமித்தியில் ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.8

பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தில் பெரிய ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளைமறுதினம் நடைபெறவுள்ளன.

அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமிஜி ஸ்ரீ ஹரி ஓம் அம்மாவின்ஆன்மீகச் சொற்பொழிவு முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும்.

நண்பகல் நாராயண சேவையும் நடைபெறும். (ஐ)


**A/L தமிழ்**
**2004, 2005**
N. வேந்தன்
ஆரம்பம்: 09.09.2003
(நேர அட்டவணை அலுவலகத்தில்)
தரம் 5
புலமைப்பரிசில் வகுப்புகள்
நடைபெறுகின்றன.
**N.E.I நல்லூர்.**
(C/30073)

**நிறைஞ்சனாஸ்**
விஜய், பிரியங்கா சோப்ரா நடித்த
**தமிழன்**
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**WISH MASTER**
(கராட்டிப் படம்) இரவு 8.45 (பி.நே.)
(C29903)

**நாகம்ஸ் சுன்னாகம்**
சில தினங்கள் மட்டும்
மம்முட்டி, அபிராமி, ராதாரவி, வடிவேல் நடித்த
**கார்மேகம்**
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, (பி.நே.)
இரவு 7.00 மணிக்கு
**Red Scorpion**
(C29908)

**ராஜா யாழ்ப்பாணம்**
மாதவன், சிம்ரன் நடித்த
**பார்த்தாலே பரவசம்**
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C29904)


## திருமண நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

திரு.க.ரவிகரன், செல்வி க.உமாபதி ஆகியோருக்கு நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் 10.09.2003 அன்று காலை 11.22-12.22 மணிக்கு நடைபெற இருந்த திருமண நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

(22371) (14-17-32) தகவல்: திருமதி இராசமலர் கந்தையா. (தாய்)

## தேவை

Corel Draw, Page Making தெரிந்தவர்கள் தேவைப்படுகின்றனர். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

புத்தகம் கட்டுதல், பட்டுத்துணிப் பதிப்பு (Book-Binding, Screen Printing) வேலையாள்களும் தேவை. பழக ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். பழகும் காலத்திலும் சம்பளம் வழங்கப்படும். அனுபவமுள்ளவர்களுக்கு தகுதியினடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

வயது எல்லை 28 வரை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

07.09.2003 தொடக்கம் 10.09.2003 வரை காலை 9.00 மணியிலிருந்து 10.30 மணி வரை நேரில்வரவும்.

**போஸ்கோ நிறக்கலை பதிப்பகம்**
252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**BOASCO ARTONE PRINTERS**
252, Point Pedro Road,
Nallur,
Jaffna.

(C/30074) (14-17-32)

## மரண அறிவித்தல்

### செல்லையா யோகேஸ்வரன்
(அதிபர், புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகேஸ்வரன் (06.09.2003) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-மகேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் சரஸ்வதியின் அருமை மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் நிர்மலன் (கனடா), விமலன் (ஆசிரியர்) நித்தியா, வித்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*3ஆம் கட்டை, கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*
(22361) (14-17-32)
தகவல்:
மனைவி. மக்கள்.

## வேலணை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றன.

| இல. | வேலை விவரம் | கேள்விவைப்புப்பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விபத்திரப் பணம் (மீளளிக்கப்படமாட்டாது) |
|---|---|---|---|
| 01 | சங்கத்தானை கோயில் வீதி, புங்குடுதீவு. | 3,000/= | 450/= |
| 02 | மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதி. | 5,000/= | 750/= |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

01. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் எம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
02. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தில் (இ.தே.ஒ.ச.) உறுப்பினராக அல்லது எமது சபையில் பதிவுசெய்யப்பட்டோரே கேள்வி கோரலாம்.
03. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு கூறுவிலை ஆற்றலளவைகளைக் கொண்டிருக்கவேண்டும்.
04. கேள்விப்பத்திர ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

அ) ஆர்வமுள்ள, தகுதி வாய்ந்த கேள்விக்காரர் மேலதிகத் தகவல்களை கேள்விப்படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கேள்விப்படிவங்களினை 08.09.2003 ஆம் திகதி தொடக்கம் 16.09.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அட்டவணையில் உள்ள தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ) கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு "செயலாளர், வேலணை பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 17.09.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாகச் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் வேலை விவரத்தினை எழுதுதல் வேண்டும்.

இ) கேள்விகள் 17.09.2003 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தோர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.

ஈ) கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

உ) மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஊ) கூறுவிலை தயாரிப்புக்கு அல்லது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

05.09.2003
(C/30072) (14-17-32)
செல்லப்பா சண்முகராசா, (ஜே.பி.)
செயலாளர், வேலணை பிரதேச சபை.

# பொலிஸ் 'பிக்கப்' – பஸ் நகரில் மோதி விபத்து!

யாழ்ப்பாணம்,செப்.8

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் ஒன்றும்,பொலீஸாரின் 'பிக்அப்' வாகனமும் மோதிக்கொண்டதில் பொலீஸார் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு தென்மராட்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸும், யாழ்.பொலீஸ் நிலைய பொலீஸாரின் 'பிக்கப்' வாகனம் ஒன்றுமே பிரதான வீதியில் பஸ்தியன் சந்திக்கு சமீபமாக மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் பொலீஸாரின் பிக்கப் வாகனம் பலத்த சேதமடைந்தது. பயணிகள் பஸ்ஸிற்கும் சிறிதளவு சேதம் ஏற்பட்டது. பிக்கப்பில் சென்ற ஆர் சிறிவர்த்தன (வயது 29) என்ற பொலீஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்தவராவார். அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தெய்வாதீனமாக பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பயணிகள் அனைவரும் இறக்கிவிடப்பட்டு விபத்துக்குள்ளான வாகனங்கள் இரண்டும் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன.

இதேவேளை,விபத்து இடம்பெற்ற வேளை பஸ்ஸின் சாரதி மது அருந்தியிருந்தாரா என்பதை அறிவதற்காக பொலீஸார் அவரை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்திருந்தனர். (ஐ-4)

# கைதானவர் திடீர் மரணம்!

பதுளை,செப்.8

ஒக்கம்பிட்டிய பொலீஸ் சோதனைச் சாவடியில் கடந்த சனியன்று கைது செய்யப்பட்ட சட்டவிரோத மது விற்பனையாளர் ஒருவர் திடீரென மரணமானார். இதனையடுத்து, சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த இரு ஊர் காவல் படையினர் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சோதனைச் சாவடியில் இறந்தவரின் சடலம் புத்தள அரசினர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இச்சடலத்தின் முக்கிய உள் உறுப்புக்கள் நீதிவானின் பணிப்பின் பேரில் கராப்பிட்டிய வைத்திய பீடத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

## ரணில் அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான கொள்கை வேறுபாடே இப் பேச்சுக்கள் முறிவடைந்ததற்கான முக்கிய காரணமாகும்.

பேச்சுக்கள் முறிவடைந்ததையிட்டு சிலர் சந்தோஷமடையலாம். இருந்தும் சுதந்திரக்கட்சியுடனான பேச்சு முற்றாக முறிந்துவிடவில்லை. அரசியலில் எப்போதும் எதிர்பாராத மாற்றங்கள் நிகழ்வதுண்டு அது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் மீண்டும் பேச்சு இடம்பெறும் சாத்தியமுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பேச்சுக்கள் முறிவடைந்த பின்னரும் கூட "மீண்டும் சந்திப்போம்" என்று கூறியவாறே ஜனாதிபதி மாளிகையை விட்டு நாங்கள் வெளியேறினோம்.

மக்கள் விரோத ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியிலிருக்கும் ஒவ்வொரு மணிநேரமும் நாட்டுக்கு ஆபத்தானது. புலிகளுக்கு அனைத்தையும் வழங்க ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கின்றார். வடக்கு - கிழக்கிலுள்ள எந்தவோர் அரசாங்க நிறுவனத்தையும் தனியார் மயமாக்கவிடமாட்டோமென புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் இரு தரப்பினரும் விட்டுக்கொடுப்புடன் பேச்சு நடத்தினோம். இருந்தும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் நேர்வே மத்தியஸ்தம் ஆகிய இரு முக்கிய விடயங்களிலேயே இரு தரப்பினருக்குமிடையே இணக்கப்பாடு ஏற்படவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு எதிரான கட்சிகள் உட்பட கலைஞர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், தமிழ், முஸ்லிம் சிங்கள மக்கள் ஆகியோரை ஒன்று திரட்டும் பணியில் நாம் தொடர்ந்தும் முழு மூச்சாக ஈடுபடுவோம்.

தேர்தல்களில் போட்டியிடும் போது சு.கவுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

- இவ்வாறு ரில்வின் சில்வா கூறினார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இறுதிப் பேச்சுக்கள் நடைபெற்று அவை முறிவடைந்தன என்று ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
DAY CLASS
BIOLOGY
09.09.2003 - செவ்வாய்
9.30-12.30
1.30-4.00
A/L 2004 4-6 p.m
BY:- நாகநாதன்
(22265)

## இடைக்கால நிர்வாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளின் வரலாற்றில் முன்னேற்றகரமான ஓர் அம்சமாகும். இந்தியாவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பங்களிப்பாகும். அத்தோடு, வடக்கு - கிழக்கு தமது பாரம்பரிய வாழ்விடம் எனக் கருதும் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வு முயற்சிகளெல்லாம் வடக்கு - கிழக்கு ஓர் அலகு என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுகளும் அந்த கருதுகோளைக் கொண்டிருந்தன.

வடக்கு - கிழக்கு இணைப்பையும் முஸ்லிம் மக்களின் உரிமைப் பிரச்சினைகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. வடக்கு - கிழக்கு இணைப்பு வேறு விடயம், முஸ்லிம் மக்களின் தனியலகுக் கோரிக்கை வேறுவிடயம் என்பதில் நாம் தெளிவான பிரக்ஞை கொண்டுள்ளோம். அந்தக் கோரிக்கையை - முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை - நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

அதேவேளை - முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்ற அச்சங்களைப் போக்கவேண்டும்; அவர்களது தனித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதிலும் தெளிவாக உள்ளோம்.

அடுத்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையில், பல ஆயிரக்கணக்கான உயிர்கள் விலையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பிரச்சினையில் தேசிய அரசியல் சக்திகள் என்று தம்மைக் கருதுபவை இணக்கப்பாட்டு அரசியலை மேற்கொள்ள வேண்டும். இனவாத - சந்தர்ப்பவாத - அரசியல் தொடர்ச்சியான இரத்தம் சிந்துதலுக்கே வழிவகுக்கும். அதேவேளை, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதித்துவம் என்ற உலக பொது அறிவுக்குப் பொருந்தாத கருத்து, நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்பட வேண்டும். யாரும் யாருக்கும் ஏகபிரதிநிதிகளாக இருக்க முடியாது. அவ்வாறு ஒன்று இருக்குமானால் தமிழ் மக்களின் சுய சிந்தனை மீது திணிக்கப்பட்டுள்ள இழிவாகத்தான் இருக்க முடியும்.

இடைக்கால கட்டமைப்பு என்பது நிரந்தரத் தீர்வுடன் தொடர்புபட்டதே. எனவே, தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய நிரந்தரத் தீர்வுக்கான முயற்சிகளை எடுப்பது பிரதானமானதும் இன்றியமையாததும் ஆகும்.

அரசியல் தீர்வு தொடர்பாக வடக்கு - கிழக்கில் எத்தகைய கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலும் பன்முகத்தன்மை, ஜனநாயகம், மனித உரிமை போன்றவற்றின் அடிப்படையிலேயே அவை நிர்மாணிக்கப்பட வேண்டும். வேறுபட்ட அரசியல் நிலைப்பாடுகள், பல்வேறு சமூகங்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ உருவாக்கப்படும் கட்டமைப்பில் வடக்கு - கிழக்கின் சகல சமூகங்களின் இருப்பையும், மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அக்கட்டமைப்பு இருக்க வேண்டும். தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஓர் தீர்வைப் பற்றிப் பேசுவதானால் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடப்பட வேண்டும். பல்வேறு அரசியல் கட்சிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல்வேறு தரப்பினருடனும் பேசி கருத்துருவாக்கம் செய்யப்பட வேண்டும். நாம் இங்கு குறிப்பிடும் சமூக அரசியல் பிரிவினர் வேறுபட்ட - சுயாதீனமான - சமூக அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களே! இதனை நாம் அழுத்தியுரைக்க விரும்புகிறோம்.

அரசியல் கட்சிகள் என்பன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள - புலி ஆதரவு நிலைப்பாடு கொண்ட - கட்சிகளையும், கல்விமான்கள் என்பது வெளிநாடுகளில் வாழும் புலி ஆதரவுப் போக்குடையவர்கள் என்றும் வெளிப்பகட்டிற்காக அல்லாமல் ஆலோசனை பெறுவது அர்த்தமுள்ள செயற்பாடாக அமைதல் வேண்டும். கடந்த 25 ஆண்டுகளாக இந்தப் போராட்டத்துடன், இந்த நிலத்துடன், இந்த நிலத்தில் வாழும் மக்களுடன், அவர்களுக்கு இருந்த தொடர்பு, அவர்களது செயற்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில் மிகக்குறுகிய - வரையறுக்கப்பட்ட - காலப்பகுதியில், முழுமையான சர்வதேசக் கண்காணிப்புடன் நீதியான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

- இப்படி வரதராஜப் பெருமாள் தெரிவித்தார். (ஐ-9)

SUBRA
A/L 2003 Paper Class
ஆரம்பமாகிவிட்டது.
Tamil:- Mon.-Wen.-Fri 6.00-7.00 p.m.
Hindu:- Thu.-Tue. 4.00-5.00
Eco.:- Sat.-sun. 5.00-6.00
Com.:- Sat.-Sun. 2.00-4.00
Acc.:- Sat.-Sun. 10.00-12.00
Geo.:- Thu.-Tue. 3.00-5.00
Physi.:- Mon.-Wen.-Fri 5.00-7.00
Chy.:- Thu.-Tue. 4.30-6.00
Maths:- Mon.-Sun. 6.00-7.30 p.m.
Bio:- Sat.-sun. 2.00-4.00
★அனுமதிக்கு முந்துங்கள்.
★தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்.

## தேச நிர்மாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை நாம்தான்நெறிப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம்தான் அமைத் துக்கொள்ள வேண்டும். இதற்காக நாம்தான் உறுதியோடு போராடவேண் டும்.

இந்த வகையில் இற்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் எமது மண்ணிலே தமிழீழக் காவல்துறை நிறுவப்பட்டது. அப்போது இருந்த நிலைமை மிகவும் நெருக்கடியானது; இடர்கள் நிறைந்தது; சிங்கள அரசின் இன அழிப்புப்போர் எமது மண்ணில் முனைப்புற்றிருந்தது; பொருளாதாரத் தடை இறுக்கமாக்கப்பட்டு உணவுப்பொருள்கள் ஈறாக அனைத்திற்குமே தட்டுப்பாடுகள் நிலவின; சட்ட ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்து மனுநீதிக்கு ஒவ்வாத ஈனச் செயல்களெல்லாம் பெருகின. எல்லாவற்றுக்கும் அப்பால் நாம் கட்டிக்காத்த சமூக வாழ்வை அடியோடு சிதைத்து, அதனூடாக எமது இனத்தின் இருப்பையே அழித்துவிட சிங்கள இனவாத அரசு பல வழிகளிலும் முயன்றது.

இந்த நெருக்கடிமிக்க ஆபத்தான சூழ்நிலையில்தான் ஆயிரமாயிரம் போராளிகளின் உதிரத்தாலும் தியாகத்தாலும் உருப்பெற்றுவரும் எமது தாயகத்தை, உன்னதமான - மேன்மையான - சமுதாயமாக மாற்றியமைத்து, எமது தேசியத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், கட்டுக்கோப்பையும் பேணிப்பாதுகாக்கும் நோக்குடன் எமது தமிழீழக் காவல் துறையை எம் மண்ணில் நாம் நிறுவினோம். இது எமது விடுதலைப் போராட்டத்திலே முக்கியமான திருப்புமுனை; எமது தேச நிர்மாணத்திலே முக்கியமான மைல்கல்.

இன்று உலகிலே பெரிதும் விபரீதமான மாற்றங்கள் நிகழ்கின்றன. பெரிதும் வளர்ச்சியுற்ற செல்வச் செழிப்பான நாடுகளில் கூட வன்செயல்கள் மலிந்து வருகின்றன. கொலைகளும், கொள்ளைகளும், காமுகர்களது வெறியாட்டங்களும் பெருகி வருகின்றன. அங்கு குற்றங்கள் ஒழியவில்லை. குற்றவாளிகளும் குறையவில்லை. மாறாகக் குற்றங்கள் பெருகி, குற்றவாளிகளும் பெருகி வருகின்றனர். அவர்களை அடைக்கும் சிறைகளும் பெருகி வருகின்றன. ஆனால், ஆளணிகளும் வளங்களும் வசதிகளும் போதுமானதாக இல்லாத போதும் எமது காவல்துறை மக்களை உள்வாங்கி, உறவை வளர்த்து, அவர்களது பேராதரவோடும் பங்களிப்போடும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தி சிறப்பாகச் செயற்படுகிறது. எதிரியின் பத்திரிகைகளே போற்றிப் பாராட்டப்படும் அளவுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது செயற்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, எமது தமிழீழக் காவல்துறை தேசப் பற்றுணர்வோடும், மனித நேயத்தோடும், அர்ப்பணிப்புணர்வோடும் செயற்படுகிறது. இதையிட்டு நான் உண்மையிலேயே பெருமிதம் கொள்கிறேன்.

எமது காவல்துறை சட்ட ஒழுங்கைப் பேணுவதோடு மட்டும் நின்றுவிடாது, சமூகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்குமான புறநிலைகளை உருவாக்கிச் செயற்படுகிறது. சமூகத்திலே நிலவுகின்ற தவறான கருத்துக்களையும், பார்வைகளையும் காலத்திற்கொவ்வாத வழக்குகளையும் மடமைத்தனமான சம்பிரதாயங்களையும்களைய நடவடிக்கை எடுத்து வருகிறது. இவற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அத்தோடு, இன்றைய நன்னாளில் தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத் திறப்புவிழா நிகழ்வு சிறப்புறவும் வெற்றி நடைபோடும் காவல் துறையின் பணி மேன்மேலும் வியாபித்து வளரவும் எனது நல்லாசிகளையும், நல்லாதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எமது காவல் துறையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது பற்றுறுதியோடு உழைத்துவரும் காவல்துறைப் பொறுப்பாளருக்கும், போராளிகளுக்கும், காவல்துறை வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"-இப்படி அவர் தெரிவித்தார்.(ஐ-3)

## காவல்துறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தளபதிகளான கேணல் சொர்ணம், கேணல் ஜெயம், கேணல் பால்ராஜ், கேணல் தீபன், கேணல் பானு, கேணல் துர்க்கா, ஆகியோருடன் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (ஐ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி க. நகுலேஸ்வரி

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி க.நகுலேஸ்வரி நேற்று (07.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு காலஞ்சென்ற பரமவல்லி தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு பொன்னம்மாவின் அன்பு மருமகளும் மங்கயற்கரசி (சுவை.அ.ப. தெல்லிப்பழை), மனோன்மணி (ஆசிரியர், நாவலர் வித்தியாசாலை, கோப்பாய்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சரஸ்வதி, மகேஸ்வரி (கிளை முகாமையாளர், துனுக்காய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரன் (காவலாளி, வலி.வடக்கு பிரதேச சபை), தனவீரசிங்கம், அனுஷா, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சற்குணலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், சண்முகலிங்கம், பஞ்சலிங்கம், விநாயகலிங்கம், இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும் நிவேதிகா, துளசிகா, ஆதவன், வைதேகி, வேந்தன், கவீதரன், தரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

தகவல்:
மா. கந்தையா
(கணவர்)

(22374) (12-17-32)

ஏக இறக்குமதியாளர்கள்
மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் ஒரே நிறுவனம்
Koyo Japan ZME
NSK Japan RML
NTN Japan CBS
சீனத்தயாரிப்பு:
HCH, NTN CHINA
மற்றும் TIMKEN RHP
போல் பெயரிங் [Bearing]
ஓட்டோ சப்ளையர்ஸ்
Product Differenciation
266A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎:021 222 2047
(22236)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி சரசாலை வடக்கை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட ஓய்வுபெற்ற உதவி நில அளவை அத்தியட்சகரும், உத்தரவு பெற்ற நில அளவையாளரும், நீதிமன்ற ஆணையாளருமாகிய,



உயர்திரு.

## தம்பிஐயா சபாநாயகம்

### அவர்கள்

(சரசாலை கிராமோதய சபை முன்னாள் தலைவரும், சாவகச்சேரி ப.நோ.கூ.ச. இயக்குநர் சபை முன்னாள் உறுப்பினரும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற முன்னாள் செயலாளரும், வடபகுதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்க முன்னாள் தலைவரும், சரசாலை பிரஜைகள் குழு முன்னாள் தலைவரும், யா/டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளரும்)

சிறந்த சமூகசேவையாளராகிய இவர் சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவரும் (18 வருடங்கள்) சரசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சரசாலை வடக்கு இளைஞர் சேவைகள் மன்றப் போஷகரும், சரசாலை வடக்கு பாலர் முன்பள்ளி அமைப்பாளரும், தலைவரும், யா/சரசாலை ஸ்ரீகணேச வித்தியாசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளரும், சரசாலை வடக்கு விவசாய சம்மேளனப் பொருளாளரும், தென்மராட்சி ஓய்வூதியர் சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்க நிர்வாக சபை உறுப்பினரும் இன்னும் பல பொதுப்பணிகளில் முன்னின்று உழைப்பவராவார்.

தீவு முழுவதுக்குமான (இலங்கை) சமாதான நீதிவானாக 29.08.2003 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி **உயர்திரு.பா.சுப்பிரமணியம்** அவர்களின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றுக்கொண்டார்.

ஆகவே, அவர் நலத்துடன் தம் மக்கள் பணி தொடர இறையருளை வேண்டி உள்ளத்தால் உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இன்னும் இவரை சமாதான நீதிவான் பதவிக்கு இனங்கண்டு விதப்புரை செய்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் **உயர்திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி** அவர்களுக்கு எமது உளப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*

**சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தினர்.**
**சரசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்.**
**சரசாலை வடக்கு சனசமூக நிலையத்தினர்.**
**சரசாலை வடக்கு ஸ்ரீ கணேச வித்தியாசாலைச் சமூகத்தினர்.**

(22328) (11-16)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.8

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் இயங்கும் இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டப் பிரிவினர் நடத்தும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 12.30 மணி மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் நாளை காலை 9.30 முதல் ஒரு மணி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் இந்தக் கருத்தரங்கு இடம்பெறும்.

இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்ட அதிகாரி செல்வி வ.வேளினி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணி எம். ரெமிடியஸ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர மற்றும் விசாரணை அதிகாரி எஸ். பெரோஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (எ-5)

# மனமுவந்து வாழ்த்துகிறோம்



சரசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற - நில அளவைத் திணைக்கள - அத்தியட்சகரும், உத்தரவுபெற்ற நில அளவையாளரும், சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்து வரும் சங்கத்தலைவரும், சரசாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சபைத்தலைவரும், யா/சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலய அபிவிருத்திச் சபைச்செயலாளரும், சரசாலை வடக்கு முன்பள்ளி பாலர் பாடசாலை அமைப்பாளரும், சிறந்த சமூகசேவையாளருமாகிய

## உயர்திரு. தம்பிஐயா சபாநாயகம்

### அவர்கள்

சமாதான நீதிவானாக 29.08.2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திரு. **பா.சுப்பிரமணியம்** அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டதையிட்டு அவர் தம்சேவை தொடர எல்லாம் வல்ல நுணுவில் சிதம்பர விநாயகர் அருள்வேண்டி மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

ப.சிவராசா (பிரகாஸ் ரெக்ஸ், சாவகச்சேரி)
வே.இராகேஸ்வரன் (பாலேந்திரா ஆடையகம், யாழ்ப்பாணம்)
க.குணபாலசிங்கம் (கஸ்தூரி பான்சி, சாவகச்சேரி)

(22329) (11-16)


## எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்



விலை ரூ. 195,350/- இலிருந்து மேல்
(எல்லா வரிகளும் அடங்கும்)



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்

**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்குவரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.



பஜாஜ் - எனது மூத்தவன்

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.



பஜாஜ் - எனது காவலன்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த.பெ. 1909, 75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 074-700600. பக்ஸ்: 074-700677, 2687175 Web Site: http//:www.dpmco.com

பிரதேச கிளை அலுவலகங்கள்: • 174B,கட்டுகஸ்தோட்டைவீதி, கண்டி. தொ.பே: 082-226146 பக்ஸ்: 082-238134 • 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ.பே: 027-2250037 பக்ஸ்: 027-2250222 • 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ.பே: 041-28488 பக்ஸ்: 041-27488 • நீகல் மாவத்தை, அம்பாறை. தொ.பே: 063-2222997 பக்ஸ்: 063-2223662 • 31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ.பே: 025-2225048/9 பக்ஸ்: 025-2225050 • தனசிறி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ.பே/பக்ஸ்: 045-2222389 • இல. 116, குருணாகல் வீதி, புத்தளம். தொ.பே: 032-2267410 பே/பக்ஸ்: 032-2267411 • [illegible] இல. 83, கண்டி வீதி, பக்கல. தொலை பேசி: 074-672019 தொலை பேசி/பெக்ஸ்: 033-2225522

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.

பெயர்..........

விலாசம்..........

சேவை நிலையம்.......... தொலைபேசி..........

பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka Advertising

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.மன்றமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 'இன்றைய மாணவர்களின் கல்வி நிலையில் பெற்றோரின் பங்கு' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேரி டிலோஜினியும் இரண்டாம் இடத்தை கோப்பாயைச் சேர்ந்த எட்வேட் அமீரா லக்ஸ்ஷாயினியும் பெற்றுள்ளனர்.

வெற்றியாளர்கள் தமது பரிசுகளை யாழ்.குருசோ வீதியிலுள்ள இளைஞர் ஆணைக்குழு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட

LG
DIGITALLY YOURS

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
(23002)




புதிய இடத்தில்
சலுகை விலையில்

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீடித்த பாவனைக்குப் பெயர் பெற்ற **Compaq, Dell** கணனிகள் உத்தரவாதத்துடன், மலிவு விலையில் (ரூ 15,000.00 லிருந்து) விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. (இச்சலுகை விலை எதிர்வரும் 19ம் திகதிவரை மட்டுமே).

STP Your Partner in IT Solution
73, Palaly Road Kantharmadam, Jaffna T.P.2222674



**மலிவு விற்பனை**

ஜப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட National, Sanyo, Hitachi வோசிங் மெசின்களை ரூபா 10,000 முதல் 15,000 வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Yarl City Garments**
**535, Parmeshwara Junction, Thirunelvelly.**
**T.P. 021 222 3453, 0777 724966**
(22352) (22-11-18)


## சுற்றுலா தொடர்பான அறிவித்தல்

3ஆம் வருட பொருளியல் சிறப்புக்கலை மாணவர்கள் 09.09.2003 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சுற்றுலா செல்வதற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

3ஆம் வருட
பொருளியல் சிறப்புக்கலை
பிரதிநிதி.

(22322) (22-11-18)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சிவநந்தினி**

நாள் : சுபானு வருடம் ஆவணி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை (10.09.2003)
நேரம் : காலை 8.35 மணி - 10.15 மணி
இடம் : பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம்
வரவேற்புபசாரம் : மணமகள் இல்லம் 12.09.2003 மாலை 4 மணி

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திருமதி சாந்தம்மா நடராஜா
தோப்பு ஒழுங்கை,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

திரு.திருமதி சிவானந்தம்- பார்வதி தம்பதிகள்.
திரு.திருமதி சயந்தன் - சிவசக்தி தம்பதிகள்
(பன்னாலை, தெல்லிப்பழை)
நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(22336) (26-11-18)

ஹரேராம்

## ஸ்ரீ ராகவேந்திரா ப்ருந்தாவன பிரவேஷ விழா



08.09.2003 முதல் 12.09.2003 வரையும்

இன்று (08.09.2003) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்த ஆதீன ஸ்வாமிகள், சென்னை ஈரோட் ஸ்ரீ சக்தி வித்யா குருகுலம் ஸ்வாமினி ஆசியுடன் ஸ்ரீ சக்தி வித்யாநிகேதன் உயர் பாடசாலை ஸ்தாபகரும் நிர்வாகியுமாகிய ஸ்ரீ ஹரி ஓம் அம்மா ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் ப்ருந்தாவன திருக்கதவு திறந்துவைத்து சொற்பொழிவாற்றுவார் தொடர்ந்து இசைக்கச்சேரியும் நடைபெறும்.

*ஸ்ரீ ராகவேந்திர ம்ருத்திக்கா*
*159/A கோயில் வீதி, நல்லூரார்.*
(22349) (22-11-18) நிர்வாகிகள்.


**இதோ!**

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-29976) (24-11-18)


## முதலாமாண்டு நினைவஞ்சலி

### "தமிழ்மணி" தெல்லியூர் செ. நடராசா



விழி திறந்தது
14 - 11 - 1923



விழி மூடியது
19 - 09 - 2002

திதி: திரயோதசி
08-09-2003

அன்புமிக்க கணவராய், அறிவூட்டும் தந்தையாய்,
அருமை அம்மப்பாவாய் பாசமிகு அம்மானாய்,
நல் சொல்லேருழவனாய், சோதிடப் பேராசனாய்,
பெருமை கொண்டு வாழ்ந்த எம் பெரியோய்
என்றும் எமக்கு வழித்துணை நீரே ஐயா!!

*21/3, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(22341) (26-11-18)

## கண்ணீர் அஞ்சலி




அமரர்
**செல்லையா யோகேஸ்வரன்**
(SLPS II.I)
*(அதிபர் யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை)*

06.09.2003 அன்று அகாலமரணமடைந்த எமது சங்க அங்கத்தவர் செல்லையா யோகேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர் சங்கம்,
கோப்பாய் கல்விக் கோட்டம்.

(22347) (26-11-18)


நாம் உங்கள் மின் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்தி
உங்களை நிதிச் சுமைகளில் இருந்தும் விடுதலை பெறச்செய்கிறோம்




இலகுவாக உங்கள் மாதாந்த
பில்களை கட்டுவதோடு
உங்கள் மாத வருமானத்தையும்
அதிகரியுங்கள்

மேலதிக விபரங்களுக்கு
நாடெங்கும் பரந்த
வலைப்பின்னலில் அமைந்த ஏதாவது
செலான் வங்கி கிளையை நாடுங்கள்

உடன் அழைக்க: **2456931**

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

GRACE

"சக்தி பண வைப்பு" உங்களின் பில் தொல்லைகளில் உதவுவதோடு உங்களின் பணத்தையும் சேமிக்கும்!

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 506 |
|---|---|
| திகதி | 05.09.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5159899-5176324

வெற்றி இலக்கங்கள் **21 25 38 41**

லக்கினம் மேடம்



ஜக்பொட் பரிசு ரூபா. 4,224,950/- வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 367,624 | 10 | 3,676,240 |
| 2 இலக்கங்கள் | 33,704 | 20 | 674,080 |
| 1 இல + லக்கினம் | 33,423 | 30 | 1,002,690 |
| 2 இல + லக்கினம் | 3,113 | 100 | 311,300 |
| 3 இலக்கங்கள் | 889 | 500 | 444,500 |
| 3 இல + லக்கினம் | 86 | 5,000 | 430,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 4,224,950 | 4,224,950 |
| மொத்தம் | 438,844 | - | 11,163,760 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.11,163,760/-

தொடர் இல. 4178473க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 செப்டெம்பர் 09ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5168703-0-82
5160275-2-00
5165161-9-62
5162813-4-65
5171741-7-67

வளமான வாழ்வித்து அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி.
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3900441 இருந்து 3920288 வரை

சீட்டிழுப்பு இல. 1433

திகதி 06.09.2003



வெற்றி எண்கள் **04 19 27 42 54**

போனஸ் எண் **33**

ஜக்பொட் பரிசு

ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 109 | 10,000/- | 1,090,000/- |
| 3 | 6,262 | 500/- | 3,131,000/- |
| 2 | 103,833 | 20/- | 2,076,660/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 126,754 | 10/- | 1,267,540/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,667,200/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா.2,481,150/-

தொடர் இல. 2936792க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 செப்டம்பர் 10ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3905137-5-19
3914343-4-04
3903449-9-52
3904485-5-95
3917195-6-01

வளமான வாழ்வித்து அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# தேவை

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. குடிசார் பொறியியலாளர் - பொறியியல் பட்டதாரி
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
   NDT உடன் 2 வருட அனுபவம்
   அல்லது
   NCT உடன் 3 வருட அனுபவம்

ஒரு கிழமைக்குள் பின்வரும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
விஸ்வகர்மா (பிரைவேட்) லிமிட்டட்,
28, மாரி அம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
Tel: 021-222 6781 Fax: 021 - 222 2996 (22323) (25-13-18)


# அன்னதானம்

## அரசடி விநாயகர் ஆலயம்
## யாழ்ப்பாணம் மணிக்கூட்டுவீதி

இன்று திங்கட்கிழமை (08-09-2003) மதியம் 12.00 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும். *விநாயக அடியார்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

அன்னதான சபை,
அரசடி விநாயகர் ஆலயம்.

(22342) (26-13-18)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 10 |
| 08 | 08 |
| 1912 | 2003 |



## திருமதி ஆச்சிப்பிள்ளை சந்திரசேகரம்
(சுகிர்தம்)

பாரினிலே எமை நன்றே வளர்த்து ஆளாக்கிய
பாசமிகு தெய்வமே! பண்பான அன்னையே!
சீறிச் சினந்தறியாத அமைதியின் உருவே - உந்தன்
நெஞ்சகலா நினைவுகள் சுமையாய் கனக்கவைத்து
நெடுதூரம் சென்றனையோ காற்றாய் வந்தெமக்கு
கனிவாய் பதில் சொல்வாய் கடவுள் சேவடியில்
கலந்த உந்தன் ஆவி சாந்திபெற வேண்டுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


எம் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகள் நாளை (09.09.2003) செவ்வாய்க்கிழமை மு.ப.7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வலவன் தோட்டம்,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.* (22344) (26-13-18)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# நெஞ்சம் மறவாத பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| ஆண்டவன் படைப்பு | அறியாய அழிப்பு |
|---|---|
| 24 | 29 |
| 08 | 08 |
| 1943 | 1993 |



## அமரர் ஐயன் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற புகையிரத சேவையாளர்களின் மேற்பார்வையாளர்)

*திதி* 08. 09. 2003

வெள்ளையுள்ளம் கொண்ட - தந்தையே!
கள்ளமில்லாத உங்கள் புன்னகையும்
கருணை பூத்த உங்கள் முகமும்
துயிலாத எங்கள் விழிகளில்
நின்று நிழலாடுதே!
உயிராக எங்கள் உள்ளத்துள்
உறவாட - ஓடி நீங்கள் வருவீரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மயில் டிஜிற்றல் போட்டோ
*வீரபத்திரவர் வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (22345) (25-13-18) - குடும்பத்தினர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் பெரியாஸ்பத்திரிக்கு முன்னால் அமைந்துள்ள மாடி வீடொன்று விற்பனைக்குண்டு. வியாபாரத்திற்கு, காரியாலயத்திற்கு வசதியான இடம். தொடர்பு: 0777-276636. (22320)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (22263)

பாவனையிலுள்ள ELF 350 40ஸ்ரீxxxx தொடரிலக்கமுடைய வாகனம் (ட்றக்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- A.B.ரஞ்சித், இல.115, பொன்னம்பலம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P. 0777-170069. (22351)

## நாடகப் பரிசு

"பவளவிழா நாடகப் பரிசு" நாடகத்தை சனிக்கிழமை வானொலியில் கேட்டீர்களா? அராலியூர் ந.சுந்தரம் பிள்ளையின் சேவைகள், சாதனைகள் அவர்பெற்ற பரிசுகள் எல்லாவற்றையும் சொல்லும் நாடகம், "எங்கள் நாடு" நூலில் உள்ளது. (22346)

## வீடு வாடகைக்கு

திருக்குடும்ப கன்னியர்மடம் பிரதான வீதிக்கு அடுத்த கதிர்றல் வீதியில் (Movimondo இற்கு அருகில்) மேல்மாடி வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும். மருத்துவபீட மாணவர்களுக்கும் தகுதியானவர்களுக்கும் அறைகள் கொடுக்கப்படும். தொடர்பு: 021 222 5687 (22313)

## தவறிவிட்டது

அத்தியடி, பருத்தித்துறையைச் சேர்ந்த S.கோபிநாத் என்பவருடைய தே.அடையாள அட்டை (இல. 642511173V), மோட்டார் சைக்கிள் பதிவுப் பத்திரம், லைசன்ஸ் அடங்கிய பேர்ஸ் யாழ்நகரில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (22350)

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த நாகராசா அனித்தா என்பவருடைய தே.அடையாள அட்டை (இல.818632460V) அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/30037)

குணரட்ணம் கேமநளினி என்பவருடைய தே.அடையாள அட்டை (655453083V), விசேட அடையாள அட்டை (இல. 0905008656), அலுவலக திறப்புக் கோர்வை அடங்கிய பேர்ஸ் 29.09.2003 வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குணரட்ணம் கேமநளினி, சுதுமலை தெற்கு, எச்சாடி, மானிப்பாய் என்ற விலாசத்தில் தயவு செய்து ஒப்படைத்துதவவும். (C/30053)

## விற்பனைக்கு

மோட்டரோலா, மொபிற்றல் தொலைபேசிகள் (இணைப்புக்களுடன்), CD, வீடியோ கஸெற், வெல்டிங் றான்ஸ்போமர் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

வேணுசங்கர்
தொலைத்தொடர்பு நிலையம்
மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு
T.P. 071 - 2345615

(22362)(26) (11-16)

## வயற்காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கராச்சி பகுதியில் நீர்ப்பாசன வசதியுடன், சிறப்பான 5ஏக்கர் வயற்காணி (பெரிய பரந்தன்காடு) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

திருமதி V. ஐயாத்துரை,
பழைய பொலீஸ் நிலையம்,
ஆனைக்கோட்டை.

(22348) (26-11-16)


# உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### "ஆஅவ" கடன் இல.1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் - 22

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்த கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

## அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | JF/NECORD/RD/01 | யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சி கிழக்கு பிரிவில் செம்பியன்பற்று வடக்கு கட்டைக்காடு 19.19 கிலோ மீற்றர் தூர மீன்பிடி வீதியினை சீர்செய்தல் - தொகுதி 1 | M7 | 32,000/= |
| | | யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சி கிழக்கு பிரிவில் செம்பியன் பற்று வடக்கு கட்டைக்காடு 19.19 கிலோ மீற்றர் தூர மீன்பிடி வீதியினை சீர்செய்தல் - தொகுதி 2 | M7 | 35,000/= |
| | | யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சி கிழக்கு பிரிவில் செம்பியன் பற்று வடக்கு கட்டைக்காடு 19.19 கிலோ மீற்றர் தூர மீன்பிடி வீதியினை சீர்செய்தல் - தொகுதி 3 | M7 | 47,000/= |
| | | யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சி கிழக்கு பிரிவில் செம்பியன் பற்று வடக்கு கட்டைக்காடு 19.19 கிலோ மீற்றர் தூர மீன்பிடி வீதியினை சீர்செய்தல் - தொகுதி 4 | M7 | 25,000/= |
| | | யாழ்ப்பாண மாவட்ட வடமராட்சி கிழக்கு பிரிவில் செம்பியன் பற்று வடக்கு கட்டைக்காடு 19.19 கிலோ மீற்றர் மீன்பிடி வீதியின் தூரத்தினை சீர்செய்தல் - தொகுதி 5 | M7 | 42,000/= |
| 02. | MN/NECORD/IR/01 | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் - தொகுதி 1 | M6 | 61,000/= |
| | | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் - தொகுதி 2 | M6 | 57,000/= |
| | | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் - தொகுதி 3 | M7 | 23,000/= |
| | | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் - தொகுதி 4 | M7 | 30,000/= |
| | | மன்னார் மாவட்ட கட்டுக்கரை குளத்தின் சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால் புனரமைத்தல் - தொகுதி 5 | M7 | 23,000/= |
| 03. | MN/NECORD/WS/02 | மன்னார் மாவட்ட வங்காலை குடிதண்ணீர் விநியோக திட்டம் புனர்நிர்மாணம். | M5 | 104,000/= |
| 04. | VA/NECORD/HS/02 | வவுனியா மாவட்ட நெடுங்கேணி சுற்றியல் கூற்றின் புனர்நிர்மாணம் - தொகுதி 1 | M6 | 69,000/= |
| 05. | BT/NECORD/IR/02 | மட்டக்களப்பு மாவட்ட வடமுனை நீர்ப்பாசன திட்டம் புனரமைத்தல் - தொகுதி 1 - (முதல்நிலை வேலைத் தொகுதி) | M7 | 31,000/= |
| | | மட்டக்களப்பு மாவட்ட வடமுனை நீர்ப்பாசன திட்டம் புனரமைத்தல் - தொகுதி 2 - (வாய்க்கால் அமைப்பு) | M7 | 32,000/= |
| | | மட்டக்களப்பு மாவட்ட வடமுனை நீர்ப்பாசன திட்டம் புனரமைத்தல் - தொகுதி 3 - (வாய்க்கால் அமைப்பு) | M7 | 28,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   (i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   (ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் மேற்படி M7இற்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.
   (iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இருஒத்த தன்மையான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுபத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.
   (iv) இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   (v) மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   (vi) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. மேற்படி பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பான கேள்வியாக அமைய வேண்டும். ஏதேனும் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகோட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்பத்திரத்திலிருந்து பெறமுடியும். என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு - கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை (தொலைபேசி இல.026-2227434, தொலைநகல் 026-2227401, மின்னஞ்சல்: necord@sltnet.lk) என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்களை 12.09.2003 இலிருந்து 24.09.2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000/=ஐ (கேள்வி ஆவணம் ஒன்றுக்கு) செலுத்தி கொள்வனவு செய்து கொள்ளலாம்.
7. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இருமுத்திரையிடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச்சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலைக்கு 26.09.2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. முன்கூட்டியே கேள்விகோருவோர் கூட்டமொன்று 22.09.2003 அன்று மாலை 2.00 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் நடைபெறும்.
10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு, தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

த.லெங்காநேசன்,
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு,
அபிவிருத்தித் திட்ட கேள்விச்சபைத் தலைவர்,
140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை.

(C/30051) (26-11-16)